சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5 | இதழ்: 11 | ஏப்ரல் - 2024 | விலை - ரூ.15/-

VOL:5 | ISSUE: 11 | APRIL - 2024 | Rs. 15/-

இனிய
தமிழ் புத்தாண்டு,
இராம நவமி
வாழ்த்துக்கள்!



தெய்வப்புலவர்
திருவள்ளுவ நாயனார்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-5 மலர்-11 ஏப்ரல் - 2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

வாழ்வில் தோல்விகளை கடந்து லட்சியத்தை அடைய வேண்டுமெனில், தனக்கும், பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும், அறிவிற்கும், உடல் உணர்ச்சிக்கும் வருத்தம் எழாத அளவில் செயலாற்றினால், நீ நிச்சயம் தடைகளை தகர்த்து வெற்றி அடைந்து இன்பமாக வாழலாம்.

உன்னுடைய முக்கிய குறைபாடு எதுவென்றால், நீ யோசித்து தீர்க்கமாக எடுத்த முடிவை செயல்படுத்துவதற்கு பதிலாக மீண்டும் அதை பற்றியே ஆலோசித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கிறாய் என்பதுதான். வாழ்க்கையில் நீ கடந்த வந்த பாதைகளை சற்று நினைவுப்படுத்திக் கொள். நீ எவ்வளவு மாறி உள்ளாய் என்பதை உணர்வாய்.

உலகத்தில் உனக்கு மட்டும் தான் கஷ்டங்கள் வருகின்றது என்பதை போன்று அலட்டிக்கொள்ளாதே! துன்பம் வரும் வேலையில் நமக்கு உதவ யாருமில்லை என்ற கற்பனை யை உனக்குள் நீயே ஏற்படுத்திக் கொள்ளாதே. நடப்பவை எல்லாம் நன்மைக்கே என எடுத்து கொள். கவலை கொள்ளாதே! நம்பிக்கை யோடு செயல்படு. நான் இருக்கிறேன். நீ செல்லும் இடமெல்லாம் உனக்கு எல்லா சூழ்நிலைகளிலும் துணை நிற்பேன்.

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து ஒன்பதாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 03.03.24 ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில்" (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பஜனை எனத்தொடர்ந்தது. காலை பத்து மணிக்கு இம்மாத இதழை "குருவருள்வேண்டி"திரு. அசோக்குமார் சாய்ராம், அவர்கள் வெளியிட, சின்னத்திரை நடிகரும், பொன்மார் பாபா ஆலய நிறு வனருமான, திரு.மோகன்சாய் அவர்களும், சென்னை பாடி, பிரபு அவர்களும், பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

திரு.சுந்தர்சாய் அவர்களும்,திரு.



மோகன்சாய் அவர்களும், ஆசிரியரும் தங்களது அனுபவங்களை

பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டனர். திரு.அகஸ்டின் அவர்கள் சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின் எதிர்கால திட்டங்களை பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டு பீடத்திற்கு காணிக்கை அளித்தவர் களின் பட்டியலை வாசித்தார்.

வருகின்ற நமது புத்தகத்தின் ஏழாம் ஆண்டு விழா சொந்த இடத்தில் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் "சாய் தியானாலயா அன்னதான குழுவினர்" அன்ன பிரசாதம் வழங்கினர்.புத்தக வெளியீட் டை முன்னிட்டு இல்லாதவர்களுக்கும்,







இயலாதவர்களுக்கும், அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

சேலம் திரு. கார்த்திகேயன் அவர்கள் நமது இதழுக்கு ஒரு ஆயுள் சந்தாதாரரையும், இரண்டு, மூன்று வருட சந்தாதாரர்களையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளார். அவரும், அவரது குடும்பத்தினரும் அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

அடுத்து வருகின்ற மாதங்களில் வெயிலின் தாக்கம் மிக அதிக மாக இருக்கும். எனவே முன்யோ சனையுடன் நடந்து கொண்டு வெப்பத்தில் இருந்து உங்களை தற்காத்துக்கொள்ளுங்கள். செயற்கை பானங்களை தவிர்த்து இயற்கை பானங்களைப் பருகுங்கள். மசாலா உணவுகளையும், காரமான உணவு களையும் தவிருங்கள். கூடுமானவரை வீட்டில் சமைத்த உணவுகளையே எடுத்துக் கொள்ளுங்கள்.

காலையில் வெறும் வயிற்றில் ஒரு ஸ்பூன் வெந்தயத்தை வாயில் போட்டு தண்ணீர் குடித்து விழுங்குங்கள்.

நாள் முழுவதும் அது உங்கள் உடலை வெப்பத்தில் இருந்து காக்கும். தவிர்க முடியாத வேலை களுக்கு மட்டும் வெளியே செல்லுங்கள். கூடுமான வரையில் உங்களது அலுவல்களை காலை 11 மணிக்குள் முடித்து விடுங்கள். கண்டிப்பாக 11 மணியில் இருந்து 4 மணி வரை வெளியில் செல்லாதீர்கள்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனை வரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மனநிம்மதி யுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

இம்மாதம் அன்புச்சகோதரி லதா பாபு அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சாயி லீலையைக் காண்போம்.

2013 ஆம் ஆண்டு, எனது குழந்தைகளும், சகோதரி லதா அவர்களின் குழந்தைகளும் பள்ளியில் ஒன்றாக படித்து வந்தார்கள். அவர்களை அழைத்துவர பள்ளிக்குச் செல்லும்போது அறிமுகமானவர்தான் சகோதரி லதா அவர்கள். அவரைப் பார்க்கும்போதெல்லாம் மிகுந்த மனக்குழப்பத்தில் இருப்பது போன்று தோன்றும். அவரும் யாரிடமும் சரியாக பேசமாட்டார். அமைதியாக இருப்பார்.

காலப்போக்கில் நாங்கள் நல்ல சிநேகிதிகளாகிவிட்டோம். ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும்போது, மனம் திறந்து அவர்களது குடும்ப கஷ்டங்களைப் பற்றிக் கூறினார். நானும் அவர்களிடம், நாங்கள் பாபா சென்டர் வைத்துள்ளோம். அங்கு பாபா பூஜை, யோகா, தியானம் எல்லாம் நடக்கிறது. நீங்களும் வந்து கலந்து கொள்ளுங்கள். நல்ல மாற்றம் கிடைக்கும் என்று பலமுறை கூறினேன்.

ஆனால், ஏனோ அவர்கள் அதில் ஆர்வம் காட்டாமல் இருந்து விட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களுக்கு சாயி பாபாவைப் பற்றி ஏதும் தெரியாது. சாயி பாபா என்ற பெயரையே ஒரு சில முறைதான் கேட்டிருக்கின்றார்கள்.



– ஜெயந்தி ஸ்ரீராம்

தவிர சிறிய அளவிலான அவரது புகைப்படத்தை ஓரிருமுறை பார்த்ததோடு சரிதானாம். மற்றபடி பாபாவைப்பற்றி அவர்களுக்கு ஏதும் தெரியாது.

சில வாரங்கள் சென்றிருக்கும், என்ன தோன்றியதோ தெரியவில்லை. என்னிடம் கூட சொல்லாமல், திடீரென ஒரு நாள் பாபாவிற்கு பிரசாதம் செய்து கொண்டு சென்டருக்கு வந்தார்கள். வந்தவர்கள் சென்டரில் இருக்கும் எட்டடி உயர பாபாவின் திருஉருவத்தைப் பார்த்ததும் அப்படியே வியந்து போய் நின்றுவிட்டார்கள்.

அப்போதுதான் முதல்முறையாக எட்டடி உயர பாபாவின்

உருவப்படத்தைப் பார்க் கின்றார்களாம். பார்த்ததுமே பாபாவின் உருவத்தில் லயித் துப்போய் சிறிது நேரம் பாபாவையே பார்த்து கொண்டிருந்தார். பின்பு பிரசாதத்தை பாபாவிற்கு படைத்துவிட்டு, பாபாவின் முன்னால் சிறிது நேரம் கண்களை மூடி அமைதியாக அமர்ந்திருந்தார்.




கண்களைத் திறந்ததும் அவரை குருவிடம் அறிமுகப் படுத்தினேன். குருவும், நீங்கள் அதிகமான மன அழுத்தத்தில் இருக்கின்றீர்கள். இதற்கு பூஜை, புனஸ்காரங்கள் செய்து கொண்டிருப்பதனால் பலன் ஒன்றும் கிடைக்காது. நீங்கள் மனதளவிலும், உடலளவிலும், மிகவும் தளர்ந்து போயிருக்கின்றீர்கள். எனவே அவசியம் தியானம் செய்யுங்கள் என்று கூறி, பாபாவின் கதைகளைக்கூறி ஆறுதல் கூறினார்.

சகோதரி லதா அவர்கள் அதிலிருந்து தொடர்ந்து பாபா விற்கு பிரசாதம் செய்து கொண்டு சென்டருக்கு வருவார். அவரே பிர சாதத்தை பாபாவிற்கு படைத்துவிட்டு அங்கிரு க்கும் பக்தர்களுக்கு கொடுத்து விட்டு செல்வார். இருப்பினும் அவருக்கு பாபாவின் பக்தியில் ஒரு அழுத்தமான பிடிப்பு இல்லாமல் இருந்தது.

அந்த சமயத்தில் அவர்களது வீட்டிற்கு அருகில் இருக்கும் அவர் களது நாத்தனார் வீட்டிற்கு அடிக்கடி சென்று வருவாராம். அவரது நாத்தனாரின் கணவர் தீவிர பாபாவின் பக்தர். இருப்பினும் ஒரு சில தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக இருந்திருக்கிறார். அதில் இருந்து விடுபட பாபாவிற்கு மாலையணிந்து விரதமிருந்திருக்கின்றார்.

அதில் இருந்து அவர் தீய பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு, நல்ல மாறுதலை அடைந்த அவர், தொடர்ந்து பாபாவிற்கு மாலையணிந்து சீரடிக்கு சென்று வருவதை வாடிக்கையாக கொண்டிருக்கின்றார். அவர் தொடர்ந்து சீரடிக்குச் சென்று வருவதைக்கண்ட சகோதரிக்கும் சாயி நாதரின் மேல் நம்பிக்கை துளிர் விட ஆரம்பித்திருக்கின்றது.

அதே நேரம் நமது குரு அவர்கள், "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்" என்ற தியான கூடத்தை ஆரம்பித்தார். அந்த இடம் சகோதரியின் வீட்டிற்கு அருகிலேயே இருந்ததால் சகோதரியும் தொடர்ந்து பீடத்திற்கு வர ஆரம்பித்தார். மெல்ல, மெல்ல, குருவின் சத்சங்கத்தை கேட்கத் தொடங்கிய அவர், யோகா, தியானம் போன்றவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பித்தார்.



பாபாவிடம் நான் காட்டிய பக்தி என் வாழ்க்கையை மாறியதோ இல்லையோ, என் மனம் மாறத் தொடங்கியது என்று கூறுகிறார். எதற்கெல்லாம் மனம் ஆசைப்பட்டு ஏங்கியதோ, அதெல்லாம் என்னை விட்டு நீங்க ஆரம்பித்தது. எதற் கெடுத்தாலும், நெருங்கிய உறவுகளைப் பற்றி கவலையும், பயமும் கொண்டிருந் தேனோ அதெல்லாம் என்னை விட்டு விலகியது.

வாழ்க்கையின் நிலையாமையை நன்கு உணர்ந்து கொண்டேன். அனைத்தையும் பாபாவிடம் ஒப்படைத்துவிட்டு முழுமையாக சரணாகதியாகும்படி எங்களது குரு அடிக்கடி கூறுவார். ஆரம்பத்தில் சற்று சிரமமாக இருந்தாலும், போகப்போக எனக்கு சரணாகதி தத்துவத்தின் முழு விளக்கமும் புரிந்தது.

சராசரி அனைத்து நடுத்தர குடும்பத்திற்குண்டான எல்லாப் பிரட்சனைகளும் எனக்கும் இருந்தாலும், "எல்லாம் பாபாவே" என்ற தெளிந்த சிந்தனையோடு,மன இறுக்கம் இன்றி வாழ்க்கையை நகர்த்தக் கற்றுக் கொண்டேன்.

நான் பாபாவின் பக்தையான இரண்டாவது வருடமே பாபா என்னை சீரடிக்கு வர வாய்பளித்தார். என் நாத்தனார் குடும்பத்துடன் சீரடிக்குச் சென்று பாபாவை தரிசித் தேன். இருப்பினும் எனது முதல் பயணம் அவ்வளவு திருப்திகரமாக அமையவில்லை.

அதற்குப்பின்பு அடுத்தவருடமே எங்களது குரு ஸ்ரீராம் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த சீரடி புனிதப் பயணத்தில் நானும் எனது இரண்டு மகன்களும் கலந்து கொண்டோம். அந்தப் பயணத்தில் தான் நான் பாபாவை முழுமையாக உணர்ந்து கொண்டேன். ஆறு நாட்கள் நாங்கள் ஐம்பது பேர் கொண்ட குழுவினருடன் மிகவும் ஆனந்தமாகவும், உற்சாகமாகவும், பாபாவின் கதைகளை கேட்டுக் கொண்டும், பாடிக்கொண்டும்,

சீரடிக்குச் சென்று பகவான் சாயிநாதரை தரிசித்தோம்.

இரண்டு பயணத்திலும் ஒரே ஒரு வருத்தம் என்னவென்றால் என்னுடன் என் கணவர் வரவில்லையே என்பதுதான். எனவே நான் பாபாவிடம் அடுத்தமுறை நான் சீரடிக்கு வரும்போது என் கணவரும் என்னுடன் வரவேண்டும் என்று பிரார்த்தனை வைத்தேன். அடுத்தவருடமே நான் என் கணவருடனும், குடும்பத்தினருடனும் சீரடி சென்று சாயியை தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்.

எங்களது பல வருடக் கனவான வீடு கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை எங்களது குருவின் மூலம் பாபாவிடம் வைத்தோம். சாய் தியானாலயாவின் அன்னதானத்திற்கு ஒன்பது வாரங்கள் உங்களால் முடிந்த தொகையை அளித்து வாருங்கள் என்று குரு அவர்கள் கூற நானும் தொடர்ந்து என்னால் முடிந்த காணிக்கையை கொடுத்துவந்தேன்.

அடுத்த ஆறு மாதங்களுக்குள் புது வீடு கட்டி புது மனை புகுவிழா வைத்தோம். அதற்கு எங்களது குரு, பகவான் சாயிநாதருடன் வந்து ஆசீர்வதித்தார். எனது மூத்த மகன் சுரேஷ் நிரந்தரமான நல்ல வேலையில் அமர வேண்டும். எனது இளைய மகன் கார்த்திக் நல்லபடியாக படிப்பை முடிக்க வேண்டும் என்று சாய் பாபாவிடம் பிரார்த்தனை வைத்திருக்கின்றேன்.

என் வாழ்க்கையில் எல்லாமே பாபாதான்! அவரை விட்டால் எங்களுக்கு வேறு கதி கிடையாது. நிச்சயம் எங்களின் பிரார்த்தனைகளை பகவான் சாயிநாதர் நிறைவேற்றுவார். அதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. இந்த தெளிவை எனக்கு அளித்த என் குரு திரு.ஸ்ரீராம் அவர்களுக்கும் என் சாய்அப்பாவிற்கும் என் மனமார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றேன். என்று கூறி முடித்தார்.

அடுத்த மாதம் வேறெரு பக்த லீலாம்ருதத்துடன் சந்திக்கின்றேன்.

ஓம் சாய்ராம்.

–தொடரும்.

நாமே அதிர்ஷ்டசாலிகள்

பகவான் பாபாவின் பெருங் கருணையை அன்றாடம் நாம் அனுபவிக்கிறோம் ஆனால் அதை நாம் உணர்கிறோமா? சுமூகமாக நம் வாழ்க்கை நகர்கிறது! தீவாக நாம் இல்லை. நம்மைச் சுற்றி கடல் போல் கடன் இல்லை! எளிய வாழ்க்கை! நமக்கென்று அழகான சாயி குடும்பம்.

சாயிராம், சாயிராம் என்று சொல்லி நேசிக்க உண்மையான உறவுகள்! ரத்த உறவு மட்டுமே உறவு இல்லை! பாபாவின் பக்த உறவுகளே உண்மையான உறவுகள்! அதுபோல் நம் மனதை கரைக்க சாயி பஜனை! நம்மையே நாம் மறக்க சமூக சேவை! நம் செலவுக்கு ஏற்றார் போல் பாபா நமக்கு அளிக்கும் வருமானம்!

பேராசை இல்லாத மனம்! குழம்பாத புத்தி! துரித உணவுக்கு அடிமையாகாத நாக்கு! சாந்தமான குணம்! "எல்லாம் பாபா செயல்!" என்று வாழும் நமது அகப் பக்குவம்! இவை எல்லாம் நாமே உருவாக்கியதா? இல்லவே இல்லை! பாபாவின் கருணை நம் மேல் சதா பொழிந்து கொண்டிருப்பதால் நமக்கு கிடைத்த இறை குணங்கள் இவை! இப்படி பாபாவின் பெருங்கருணையை சதா அனுபவிக்கும் நம்மை விட வேறு யார் உலகில் அதிர்ஷ்டசாலிகள்.

கோபால்ராவ் சோம்நாத் நிமோன்கர்

கோபால்ராவ், சங்கம்நேர் மாவட்டத்தில் நிமோன் என்ற கிராமத்தில் பிறந்தவர். நன்கு படித்தவரான இவர், புனே எஸ்.பி கல்லூரியில் பி.ஏ.எல்.எல்.பி என்ற படிப்பை படித்தார். அவர் சமஸ்கிருதம், ஆங்கிலம், மற்றும் சோதிடத்தில் நன்கு புலமை பெற்றிருந்தார்.

இவருடைய தந்தை சோம்நாத் ஒரு புகழ் பெற்ற சோதிடராக விளங்கியதால், கோபால்ராவிற்கும் சோதிடத்தில் மிகுந்த நாட்டம் இருந்தது. இவை தவிர யோகத்திலும், சிறந்து விளங்கியவர், ஆன்மீகத்திலும் முதிர்ச்சி பெற்றவராக விளங்கினார்.

அவரது பெற்றோர், இவர் குழந்தையாக இருக்கும் போது இவரை தூக்கிக் கொண்டு சீரடிக்குச் சென்று பாபாவிடம் ஆசி பெற்றனர். பாபா இவரை தன் மடியில் கிடத்திக் கொண்டார். பிறகு ஒரு சால்வையால் இவரைப் போர்த்தி, இவனை இன்றுமுதல் ஏக்நாத் என்று கூப்பிடுங்கள் என்றார்.

ஏற்கனவே குழந்தைக்கு, கோபால் ராவ் என்று பெயர் சூட்டி விட்டதால் அவரது தந்தை மிகவும் தர்மசங்கடமாக உணர்ந்தார். அவரது தர்மசங்கடத்தை உணர்ந்த பாபா, யாருக்கு எப்படியோ, இவன் எனது ஏக்நாத் என்றார்.

1916 ல் எடுக்கப்பட்ட லெண்டி பாக் ஊர்வலப் புகைப்படத்தில் நானாசாகேப் நிமோன்கருக்கு அருகில் நிற்கும் சிறுவனே கோபால் ராவ் ஆகும். இதை பின்னாளில் அவரது



மகள் அப்புகைப்படத்தைக் காட்டி உறுதிப்படுத்தினாள்.

இவர் தனது பேச்சுத் திறமையால் ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞராக அகமது நகரில் புகழ் பெற்று விளங்கினார். பல சட்டக் கல்லூரி மாணவர்கள் அவரிடமிருந்தே வழக்குகளில் திறமையாக வாதாடுவது எப்படி என்று கற்றுகொண்டு தேறினர்

அவருக்கு ஆங்கில மொழியில் மிகுந்த புலமை இருந்தது. அதே நேரம் அவர் சமஸ்கிருத மொழியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவர் விஷ்ணு சஹஸ்ரநாமம், ருத்ராபிசேகம்,

மற்றும் பல்வேறு சூக்தங்களை எல்லாம் தமது வெண்கலக் குரலில் கணீரென பாடும்போது இவரது இல்லமே புனிதமான அதிர்வலைகளால் நிரப்புவதை அவரது குடும்பத்தினரும், அவரது நண்பர்களும் உணர்ந்தனர்.

இருபத்திரண்டு வருடங்களாக மகாசிவராத்திரி அன்று தன் சக வழக்கறிஞர்களோடு ஏக்நாத் மகராஜின் சமாதிக் கோவில் இருக் கும் பைதானிலிருந்து பத்தர்டி மாவட்டத் திலுள்ள மாதெர்தேவ் என்ற புனித தலம் வரை பாத யாத்திரையாக சென்று அங்கு ருத்ர அபிசேகம் செய்வார். பாபா இவரே எனது ஏக்நாத் என்று அழைத்ததில் வியப்பில்லை அல்லவா?

இவர் தனது 73 வது வயதில் இதய நோயை எதிர்கொண்டு உயிர் பிழைத்தார். பிறகு தனது 84 வது வயதில் 19.12.1997 அன்று இவர் சமாதியடைந்தார்.

பாபா வாழ்ந்த காலத்தில் இருந்து இராமநவமி தினத்தன்று, ஒவ்வொரு வருடமும் இரண்டு கொடிகள் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு துவாரகாமாயியின் கலசத்தில் கட்டப்படுவது வழக்கம். இரண்டு கொடிகளில் ஒன்று, நிமோன்கர் இல்லத்தில் இருந்தும், மற்றொரு கொடி தாமு அண்ணா இல்லத்தில் இருந்தும் கொண்டுவரப்படுகின்றது. இந்த பாரம்பரியமான வழக்கத்தை கோபால்ராவ் குடும்பத்தினர் இன்று வரை கடைபிடிக்கின்றனர்.

புனேயிலிருந்து சீரடிக்கு கொடி கொண்டுவரும் புனித வழக்கத்தை தொடர்ந்து செய்திடுவதற்காக பாபா பக்தர்களாகிய நம்மால் நினைவு கூறத்தக்கவர் நமது கோபால்ராவ் சோம்நாத் நிமோன்கர்.

நாமே தொடக்கம்!



வெளியே தேட ஆன்மீகத்தில் ஒன்றுமே இல்லை! வெளியே வேஷங்களே உலாவுகின்றன! உள்ளே தான் ஞான ஊற்று! உள் பயணமே ஆன்மீகம்! அந்த உள் பயணமே வெளிப் பயணத்திற்கும் சேர்த்து வெளிச்சம் தருகிறது! ஏதோ ஒருமணி நேரம் சம்பிரதாயத்திற்காக சாயிராம் சொல்லி, பஜனை புரிந்து வெளியேறுவதல்ல சாயி ஆன்மீகம்!

எத்தனை நபர்களுக்கு சேவை செய்தோம். எத்தனை பஜனைகள் செய்தோம் என்று கணக்குக் காட்டுவதல்ல சாயி நெறி! எந்த அளவுக்கு முதலில் நாம் சாயி நெறிகளை அன்றாட வாழ்வில் கடைபிடிக்கிறோம் என்பதை வைத்தே பாபாவுக்கு அது உயர் சேவையாக சென்று சேர்கிறது!

வீட்டில் ஒரு மாதிரியும், அலுவலகத்தில் ஒரு மாதிரியும், ஆன்மீக சங்கத்தில் ஒரு மாதிரியும் என முகமூடிகள் அணிவதை நிறுத்தி, எந்த சூழ்நிலைகளிலும் நாம் சாயி நெறியை நழுவாமல் பின்பற்றுவது என்பதே தவம்! அது காட்டில் சென்று தவமியற்றுவதை விட சவாலானாது! சவால் நிறைந்ததே ஆன்மீக வாழ்க் கை! அது வெறும் நேர செலவழிப்பு அல்ல! அனுதினமும் நமது பண்பின் வெளிப்பாடு. ஆன்மீக மாற்றம் என்பதை சமுதாயத்திடம் இருந்து அல்ல, நமக்குள் இருந்தே ஆரம்பிக்க வேண்டும்!

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா



*அ*ன்பிற்கினிய சாயி சொந்தங்கள் அனைவருக்கும் எமது பணிவான வணக்கங்கள். முதற்கண் யாம் எழுதிய "குருவைதேடி" தொடருக்கு அமோகமாக ஆதரவளித்த உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றோம். குருவை தேடி நிறைவடைந்ததும் ஒரு மாத ஓய்விற்குப் பிறகு சாய் சரிதம் மூலம் மீண்டும் உங்களை சந்திக்க வந்திருக்கின்றேன். உங்களின் பேராதரவை வேண்டி,

சாய்சரிதம் என்பது சமுத்திரம். இது எதற்கு வேண்டாத வேலை என சிலர் நினைக்கலாம். கடுமையான வேலைதான். ஆனால் இதில் மூழ்கியவர்கள் அத்துனை பேரும் முத்தெடுத்திருக்கின்றார்கள்! நமக்கு முத்து கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. மூழ்கியாவது பார்ப் போமே! மூழ்க முடியாவிட்டாலும் பரவாயில்லை! காலையாவது நனைத்துக் கொள்வோமே!

எதையுமே செய்யாமல் வேடிக்கை மட்டும் பார்ப்பேன் என்றால் எப்படி? சாயி பக்தர்கள் அவ்விதம் கரையிலேயே நிற்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். நான் சமுத்திரத்திற்குள் இறங்கப்போகிறேன். என்னுடன் நீங்களும் சமுத்திரத்திற்குள் இறங்க தயாராகுங்கள்.

அப்படியானால் நாங்கள் இன்னும் சாய் பாபாவைப்பற்றி அறிந்து கொள்ளவில்லை என்கிறீர்களா

என்று கோப்படாதீர்கள். ஆமாம் என்று கூறுவதற்கு முன்பாக மற்றொன்றை கூறிக்கொள்கிறேன். இங்கு சாயி சமுத்திரம் மட்டும் அல்ல, நிறைய சமுத்திரம் உண்டு, சிவ சமுத்திரம், விஷ்ணு சமுத்திரம், பிரம்மசமுத்திரம், அல்லா சமுத்திரம், கர்த்தர் சமுத்திரம், குரு நானக் சமுத்திரம் என்று ஏகப்பட்ட சமுத்திரங்கள்.

இவை எல்லா சமுத்திரங்களும் நமக்குத் தெரியும். எதில் முழுவதுமாக இறங்கியிருக்கிறோம் என்றால் உங்கள் பதில் என்னவாக இருக்கும். என்னவாக இருக்கும் என்பது எமக்குத் தெரியும். ஆகவே அதற்கு நீங்கள் பதில் சொல்லி உங்களை நீங்களே குழப்பிக் கொள்ள வேண்டாம்.

வாருங்கள் ஏதாவது ஒரு சமுத்திரத்தில் கடைசிவரை மூழ்கிப்பார்ப்போம்."எதைப்பிடித்தாலும் இறுக்கிப்பிடி" என்று சாயி சொல்லியிருக்கிறார் அல்லவா? எனவே இதுவரையில் கரையில் நின்று களித்தது போதும். வாருங்கள் சற்று நெருங்கிச் செல்வோம். முடிந்தவரை செல்வோம். எவ்வளவு தூரம் சென்றாலும் லாபம் நமக்குத்தானே!

அன்பிற்கினிய சாயி பக்த வாசகர்களே! பகவான் சாயி வாழ்ந்த காலத்தில், அவரோடு வாழ்ந்த மாந்தர்களுடன் நாமும் சேர்ந்து வாழ்ந்து வருவோம் வாருங்கள்!

அத்தியாயம்: 1

என் பெயர் கோவிந்த ரகுநாத் தபோல்கர் 1859 ஆம் வருடம் தாணே ஜில்லாவில் ஒரு சிற்றூரில் பிறந்தேன்.



எனது குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்ததினால் என் தந்தை என்னை மிகவும் சிரமப்பட்டு ஐந்தாம் வகுப்பு வரை படிக்க வைத்தார். அதற்குமேல் என் தந்தைக்கு வசதி இல்லாததனால் நான் எனது படிப்பை நிறுத்தி விட்டு வீட்டிலேயே இருக்க வேண்டியதாக இருந்தது.

சில வருடங்கள் கழித்து எட்டு ரூபாய் சம்பளத்தில் எனக்கு ஆசிரியர் உத்யோகம் கிடைத்தது. வேலை செய்து கொண்டே ரெவினியூ பரிச்சை எழுதி தேர்வானதால் ஒரு ஆபீஸில் குமாஸ்தா வேலையும், பிறகு காட்டிலாக்காவில் உத்யோகமும் கிடைத்தது. 1901 ல் நிரந்தரமாக மாம்லத்தார் பதவியில் நியமிக்கப்பட்டேன்.

அதன்பிறகு 1916 ஆம் வருடம் நான் ஓய்வு பெறும் வரை பல்வேறு இடங்களில் பணி செய்தேன். 1903 லிருந்து 1907 வரை பாந்த்ராவில் பணிபுரிந்தபோதுதான் என் வாழ்க்கையில் முக்கிய திருப்பமாக வக்கீல் எச். எஸ். தீட்சித்திடம் நட்பு

உண்டானது. 1909 ஆம் வருடம் எச்.எஸ். தீட்சித் அவர்களை அவரது நண்பர் திரு. நானா சாஹேப் சாந்தோர்கர் அவர்கள் சீரடி அழைத்துச் சென்று பாபாவிடம் அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

நாங்கள் இருவரும் ஸ்ரீ மத் பகவத் கீதையை பாராயணம் செய்து வந்தோம். 1909 ஆம் ஆண்டு தீட்சித் எனக்கு சிறிய அளவிலான பாபாவின் புகைப்படம் ஒன்றை அளித்து இவர் பெயர் சாயி. இவர் ஓர் "அதிசயமான மகாத்மா" என்று அறிமுகப்படுத்தினார். அதுதான் எனது முதல் பாபாவின் தரிசனம்.

பாபாவின் படத்தைப் பார்த்ததில் இருந்து எனக்கு சாயியை தரிசிக்க வேண்டும் என்ற ஏதோ உந்துதல் ஏற்பட்டது. உடனடியாக சர்க்காரி டம் ஒரு மாதம் விடுமுறை கேட்டு விண்ணப்பித்தேன். அதுவும் உடனே மறுக்கப்பட்டது. வேறு என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசித்தேன்.

அப்போது நான் "காடே" ஜில்லாவில் பணி புரிந்து கொண்டி ருந்தேன். அங்கிருந்து சீரடி வெகு தூரத்தில் இருந்தது. நான் ஏற்கனவே பணிபுரிந்த "பாந்த்ரா" வில் இருந்து சீரடி அருகில் இருந்தது. எனவே பாந்த்ராவிற்கு பணி மாறுதல் கேட்டால் என்ன என்று தோன்றியது. உடனடியாக பணி மாறுதலுக்கு விண்ணப்பித்தேன்.

ஏற்கவே நான் இரண்டுமுறை பாந்த்ராவில் பணியில் இருந்ததால் அதுவும் மறுக்கப்பட்டது. மனம் சலிப்படைந்த நிலையில் இருக்கும் போதுதான் அந்த சம்பவம் நிகழ்ந்தது.

லோனாவாலாவில் பணிபுரியும் எனது நெருங்கிய நண்பர் ஒருவருக்கு திருமணம் முடிந்து நீண்டகாலம் குழந்தைவரம் கிட்டாமல் இருந்தது.

அவருடைய குருவின் அருளால் பல காலம் கழித்து ஓர் மகன் பிறந்தான்.

நல்ல குணங்களுடன் மிகவும் ஆரோக்கியமாக இருந்தவன் திடீரென கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டான். மருத்துவர்கள், மாந்திரீகவாதிகள், அனைவரும் முயற்சித்தார்கள். மனித முயற்சிகளான எல்லா உபாயங்களும் நடந்தன. முடிவாக நண்பரது குரு குழந்தைக்கு அருகிலேயே அமர்ந்து தியானம் செய்தார். ஆனால் அந்த பாலகன் இறந்துவிட்டான்.

உலகினில் மரணம் மட்டுமே நிலை யானது என்பது ஏனோ அப்போதைய மனநிலையில் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத தத்துவமாக இருந்தது. அதனால் என் நண்பனின் குழந்தையின் மரணச்செய்தியை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

என்னுடைய துக்கம், அறியாமை அனைத்தும் சேர்ந்து, கோபமாக உருமாறி, நண்பரின் குருமேல் பாய்ந்தது. தன்னையே பரிபூரணமாக சரணாகதியடைந்திருக்கும் ஒரு பக்தனின் மகனை காப்பாற்ற முடியாத குருவினால் என்ன பிரயோஜனம்? ஒரு குருவால் சீடன் அடைந்த பலன்தான் என்ன?

பிராப்த கர்மா என்பது தவிர்க்க முடியாததாக இருந்தால் எதற்கு வேண்டுதல்? எதற்கு பிரார்த்தனை? எதற்கு குரு நம்பிக்கை? நான் ஏன் சீரடிக்குப் போக வேண்டும்? குருவே கதி என்றிருந்த என நண்பனின் வாழ்க்கை தலைகீழாக மாறியது ஏன்? குரு அருகில் இருந்தும் என் நண்பன் பெற்ற ஆனந்தம் தான் என்ன?

தலை எழுத்துப்படி நடப்பதுதான்

நடக்கும் என்றால் குரு என்பவர் இல்லாவிட்டால் என்ன குறைந்துவிடப் போகிறது? என் வினைப்பயனுக்கு குரு என்ன செய்துவிடமுடியும்? நடப்பது நடந்தே தீரும். என்ன முயற்சிக்கினும் நிற்கப் போவதில்லை. என்றால் என் இடத்தை விட்டு நான் ஏன் குரு இருக்கும் இடம் தேடி ஓட வேண்டும்.

எதார்த்தமாக, எதிர்பாராமல், ஆசைப்படாமல் கிடைக்கும் சுக துக்கங்களை அனுபவித்தே தீர வேண்டும். நிகழ்காலத்திலோ, எதிர்காலத்திலோ நடக்கப்போவதில் இருந்து யாரும் தப்பிக்கமுடியாது. இதில் குருவிடம் சென்றால் மட்டும் என்ன நடக்கும் என்று எண்ணி சீரடிக்குச் சென்று சாயியை சந்திப்பதாக இல்லை என்று முடிவெடுத்து சீரடிப்பயணத்தை தள்ளிப்போட்டேன்.

ஆனால் என்னுடைய கர்மபலனோ, சீரடியில் வசிக்கும் பக்கிரி சாயியின் சங்கல்பமோ, நான் வேண்டாம் என்றது நடந்தது. பிறகு என்ன செய்வது. எல்லாவற்றையும் ஓரம் கட்டிவிட்டு எது நடக்கின்றதோ அதன் பின்னே ஓட வேண்டியதுதான். ஆம் என் கர்ம பலன் என்னை சீரடிக்கு இழுத்துக் கொள்ள முடிவு செய்தது.

சில மாதங்கள் போயிருக்கும். அது ஒரு வியாழக்கிழமை. நான் அலுவலகத்திற்குச் சென்ற சில நிமிடங்களில் கமிஷ்னர் என்னை அழைத்து. பாந்த்ராவில் உள்ள உதவி கலெக்டர் எதிர்பாராத விதமாக சென்ற மாதம் காலமாகி விட்டார். நீங்கள் ஏற்கனவே பாந்த்ராவிற்கு பணி மாற்றம் கேட்டிருந்தீர்கள் அல்லவா. ஆகையால் அவரது இடத்திற்கு



உங்களை நியமித்திருக்கின்றோம். நீங்கள் பாந்த்ரா செல்ல தயாராகுங்கள் என்று உத்தரவிட்டார்.

எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. சிறிது குழப்பமாகத்தான் இருந்தது. இருந்தாலும் என் உள் மனதில் ஏதோ ஒரு இனம் புரியாத ஆனந்தம் பரவியது. நான் கமிஷ்னரிடம் பாந்த்ரா செல்ல சம்மதம் தெரிவித்து பொறுப்பேற்றுக்கொண்டு பாந்த்ரா சென்றேன்.

நான் பாந்த்ராவின் உதவி கலெட்ராக பணி ஏற்றுக்கொண்ட இரண்டாவது மாதம் ஒரு நாள் காலையில் எனது உயர் அதிகாரியும் எனது நெருங்கிய நண்பருமான, நானா சாஹிப் சாந்தோர்கர், எங்கள் கிராமத்திற்கு வந்து என்னைப் பார்க்க வேண்டும் என்று ஆள் அனுப்பினார்.

நான் மிக விரைவாக வந்து நானாவை சந்தித்தேன். நான் அவரை சந்தித்த அந்த விநாடி முதல் சீரடிக்கதை ஆரம்பமாகியது. அலுவல் நிமித்தமாக தாதருக்கு

செல்ல வேண்டி இருந்தது. வண்டி ஒரு மணிநேரம் தாமதமாம். அது தான் உன்னைப்பார்த்துவிட்டுப் போகலாம் என்று ஆள் விட்டு அனுப்பினேன். என்ற நானா சாஹிப், "சாயியின் தரிசனத்திற்கு நீ எப்போது போகிறாய்"? சீரடிக்குச் செல்வதில் நீ ஏன் காலதாமதம் செய்கிறாய்? மனதில் நீ இன்னும் முடிவு செய்யவில்லையா? என்று அடுக்கடுக்கான கேள்விகளால் என்னை துளைத்தார்.

நான் ஒருவாறு நெளிய ஆரம்பித் தேன். பிறகு என் மனதில் உள்ள சங்கடத்தை முழுவதுமாக நானாவிடம் விவரித்தேன். எல்லாவற்றையும் பொறுமையாக கேட்ட நானா, அப்படியானால் நீ "உன்னை மட்டுமே நம்புகிறாய்" அப்படித்தானே! என்றார்.

அப்படியல்ல, "கையில் இருக்கும் வெண்ணையை விட்டுவிட்டு நெய்க்கு அலைவானேன்" என்று யோசித்தேன் என்றேன் நான் நெய்யே தயாராக இருக்கும்போது, கையில் இருக்கும் வெண்ணையை உருக்கி நெய்யாக்குவரை எவனாவது காத்திருப்பானா? வெண்ணைக்கும், நெய்க்கும் உள்ள வித்தியாசத்தை கூட உணராதவனா நீ! வெண்ணையை நெய்யாக உருக்க உனக்கு பக்குவம் தெரியுமா? அதற்கு காலம் ஒத்துவரவேண்டாமா?

சரி! அப்படியே உன் கூற்றுக்கே வருகிறேன். உன் கையில் இருக்கும் வெண்ணை தீர்ந்து போகாமல் காலம் முழுவதும் அப்படியே இருக்குமா என்ன? ஒரு நாள் தீர்ந்துவிட்டால் என்ன செய்வாய்? "நான் என்னை மட்டுமே நம்புகிறவன்" என்பதெல்லாம் ரத்த ஓட்டம் இருக்கும் வரைக்கும்தான். ரத்தம் சுண்டிவிட்டால் ஊன்றி நடக்க ஒரு குச்சியாவது கிடைக்காதா என்று ஏங்குவாய்!

நான் கூறுவதைக்கேள் ரகுநாத், சாயி மகான்களுக்கெல்லாம் மகான். அவர் அறியாமல் இங்கு எதுவும் நடப்பதில்லை. இறைவன் நம்மேல் வைத்த கருணைதான். இறைவனின் பேரொளியே சீரடியில் வந்து இறங்கியிருக்கிறது. இவ்வுலகில் நடக்கும் சம்பவங்களை எல்லாம் ஒன்றோடொன்று முடிச்சுப்போட்டு தர்க்கவாதம் பண்ணிக் கொண்டிருந் தால் நீ யார் என்பதை எப்போது உணர்வாய். சாயி சாதாரணமான ஆளில்லை உனது ஏழேழு சென்மங் களையும் அறிந்தவர்.

எனவே உனது, விதண்டாவாதங் களையும், தர்க்க சிந்தனையையும் தூர வைத்துவிட்டு சீரடி சென்று சாயியை தரிசனம் செய்! உனது ஆன்ம முன்னேற்றத்தின் சூட்சுமதாரி சாயி என்பதை உணர்வாய்! உன் நன்மைக்காக கூறுகிறேன். இனியும் என் வார்த்தையை தட்டாதே!

"இப்பொழுதே சீரடி செல்கிறேன்" என்று உறுதி கூறு என்று நானா என்னிடம் கேட்டார்.

நானாவின் நலம் தரும் அன்பு நிறைந்த அறிவுரைகளும், அவர் தந்த விளக்கங்களும் என்னை சீரடிக்குப் போகத் தூண்டின. கண்டிப்பாக இன்றே சீரடிக்கு புறப்படுகிறேன். என்று நானாவிடம் உறுதியளித்தேன்.

அதன்பிறகு அலுவலகத்திற்கு பத்து நாட்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு பயணத்திற்கு தேவையான பொருட்களை தயார் செய்து கொண்டு அன்று மாலையே பாந்த்ரா இரயில் நிலையம் சென்றேன். அங்கு மன்மாட் செல்லும் வண்டி புறப்படத் தயாராக

இருந்தது. அந்த வண்டி தாதரில் நிற்கும் என்று நினைத்து தாதருக்கு டிக்கெட் எடுத்துக்கொண்டு இரயிலில் ஏறி அமர்ந்து கொண்டேன்.

வண்டி புறப்படும்போது, இஸ்லாமிய இளைஞன் ஒருவன் என்னருகே வந்து எனது பொருட்களைப் பார்த்துவிட்டு, எங்கே பயணம் என்று கேட்டான். நான் அவனை மேலும் கீழும் பார்த்துவிட்டு, தாதர் சென்று மன்மாட் இரயிலை பிடிக்கப்போகிறேன் என்று கூறினேன்.

அவன் உடனே என்னிடம், மன்மாட் செல்லும் மெயில் தாதரில் நிற்காது. போர்பந்தரில்தான் நிற்கும். எனவே நீ தாதரில் இறங்காதே. போர்பந்தரில் இறங்கிக்கொள் என்று ஆலோசனை கூறினான். நல்லவேலை என் நேரம் நல்லநேரமாக இருந்தததால் ஒன்றும் யோசிக்காமல் இஸ்லாமிய இளைஞன் கூறியதுபோல் போர்பந்தரில் இறங்கிக்கொண்டேன்.

நான் இறங்கிய சிறிது நேரத்திலேயே, மன்மாட் மெயில் வரவும் அதில் ஏறிக்கொண்டு மறுநாள் காலை10 மணிக்கெல்லாம் சிரமமில்லாமல் சீரடி வந்து சேர்ந்தேன். ஒரு வேலை இஸ்லாமிய இளைஞன் கூறியதைக் கேட்காமல் எனது சிந்தனைப்படி நடந்து தாதரில் மெயில் கிடைக்காமல் போயிருந்தால் எனது சஞ்சலப்பட்ட மனது மீண்டும் மரத்தில் ஏறியிருக்கும்.

சீரடியில் எனக்காக தீட்சித் அவர்களும், பாபாவின் பரமபக்தனான தாத்யா சாகிப் நூல்கரும் "ஸாதே வாடாவில்" காத்துக்கொண்டிருந்தனர் 1910 ஆம் ஆண்டு பக்தர்கள் தங்குவதெற்கென்று சீரடியில் ஸாதே வாடா மட்டுமே இருந்தது. நான் குதிரை வண்டியில் இருந்து



இறங்கியவுடனே சாயியியை தரிசிக்கவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று.

என் சிரசினை அவரது பாதங்களில் சரணாகதி செய்து, எனது வந்தனத்தை எப்போது சாயிடம் சமர்ப்பிப்போம் என்று என் மனம் ஆனந்தக் குதியாட்டம் போட்டது.. எனவே நான் தீட்சித்திடம் கேட்ட முதல் கேள்வி, நான் எப்போது சாயியை தரிசிக்கலாம்?

இக்கேள்விக்கு தாத்யா சாகிப் நூல்கர் பதில் கூறினார். பாபா பக்தர்கள் கூட்டத்துடன் வாடாவில் இருக்கிறார். உங்கள் பெட்டி, படுக்கைகளை அறையில் வைத்து விட்டு,உடனே போய் ஒரு தரிசனம் செய்து கொள்ளுங்கள். பிறகு பொறுமையாக குளித்துவிட்டு பாபா மசூதிக்கு வந்தவுடன், மீண்டும் போய் தரிசிக்கலாம் என்றார்.

நான் உடனே பாபா இருக்கும்

இடம் தேடி ஓடினேன். பாபா பக்தர்கள் கூட்டத்துடன் வாடாவில் நின்றிருந்தார். நான் அவரை தலை முதல் கால் வரை பார்த்தேன். என் உடல் சிலிர்த்து எனக்கு எல்லையற்ற ஆனந்தம் உண்டாயிற்று. என் அத்தனை அவயங்களும் மண்ணில்பட அவரது பாதங்களில் சரண்புகுந்தேன்.

நானா சாஹிப் கூறியதைவிட உண்மையில் அதைவிட அதிகமாகவே உத்தம மாகானின் பேரொளியை பாபாவிடம் கண்டேன். சாயி தரிசனத் தால் நான் புண்ணியம் பெற்றேன். என் கண்கள் அதன் பயனை அடைந்தன. அந்த ரூபத்தை பார்த்தும் என்றுமே நான் காணாத, கேட்காத, அறியாத, பேரானந்தத்தை அடைந்தேன்.

என் பசி தாகங்கள் அடங்கின, இந்திரியங்கள் சம நிலையை அடைந்தன. சாயியின் சரணப்பரிசம், அவருடன் சம்பாசனை, இவை என் இல்வாழ்வுக்கு ஒரு பூரணத்துவத்தை அளிக்கப்போகின்றன. அந்தக் கணத்தில் இருந்து எனது புது வாழ்க்கை ஆரம்பமாகியது.

பாபாவின் தரிசனம் கிடைத்த அக்கணத்தில் இருந்து என் மனதில் இருந்த சஞ்சலம் பறந்தோடிவிட்டது. சாயியின் தொடர்பினால் என்னிடம் இருந்த பரமானந்தம் ஒளிவீசத் தொடங் கிவிட்டது. தேவையற்ற சிந்தனைகள் நீங்கிவிட்டது. பழைய தர்க்கங்கள் என்னை விட்டு ஓடிவிட்டன.

அவருடைய கருணை நோக்கினால் என் பழவினைகளின் தொகுப்பு அழிந்து போயிற்று. அவருடைய நாம சரணங்களே ஏதுமறியாத என் போன்றோருக்கு ஆத்மானுபூதியை வழங்கும் என்று என் மனதில் தோன்றியது. என்னுடைய பூர்வ புண்ணியத்தினால் காக்கையாக இருந்த நான் சாயி என்ற புனிதமான மானஸரோவரில் நீந்தும் அன்னப் பறவையாக மாறினேன்.

சாயி ஒரு மகாத்மா, சற்குரு, சாதுக் களின் பொக்கிஷம், பரமயோகி, பரம ஹம்சர், கோப, தாப உத்வேகங்களை அழிக்கின்ற புண்ணியாத்மாவின் தரிசனத்தால் நான் இப்போது பரம பவித்ரனாக மாறிவிட்டேன். என் பூர்வபுண்ணிய பலனால் என்க்கு சாயி கிடைத்தார்.

அதே நேரம் யார் மூலம் இந்த சத்சங்கம் கிட்டி என் மனதிற்கு பேரனுபவமாகிய பரமானந்தம் கிட்டியதோ அவர்களே எமக்கு நண்பர்களும், உறவினர்களும் ஆவார்கள். அவர்களைவிட நெருக்கமான வர்கள் இவ்வுலகினில் வேறு யாருமில்லை என்று மனதால் உறுதி ஏற்றுக்கொண்டேன்.

அவர்களுடைய இந்த மகத்தான உதவிக்கு என்னால் வேறு எந்த உபகாரமும் செய்ய முடியாது என்பதை நான் நன்கறிவேன். ஆகையால் என் கரங்களைக்கூப்பி என் தலையை அவர்களின் பாதங்களில் வைக்கிறேன்.

சாயி தரிசனம் செய்து வாடாவிற்கு வந்து திரு. தீட்சித் அவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் மல்க பேச்சற்று நின்றேன். என் நிலையை பரிபூரணமாக உணர்ந்த தீட்சித் என் முதுகில் தட்டிக் கொடுத்து, இனிமேல்தான் கதையே ஆரம்பமாகப்போகிறது. இதற்கே இப்படி வியந்துபோய் நின்றால் எப்படி? போய் குளித்து தயாராகுங்கள். சாயி மசூதிக்கு வந்ததும் சாவகாசமாக சென்று தரிசிக்கலாம் என்றார்.

– தரிசனம் தொடரும்...

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"தீகம்பரா தீகம்பரா ஏநீ பாத ஏநீ வல்லப தீகம்பரா"

"தீகம்பரா தீகம்பரா ஏநீ சக்ரதத்தாத்ரேயா தீகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தெய்வப்புலவர்
திருவள்ளுவர்

உலகை அளக்க வாமனருக்கு மூன்று அடிகள் தேவைப்பட்டது. ஆனால் திருவள்ளுவருக்கு இரண்டடிகளே போதுமானதாய் இருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒருவர் எழுதிய செய்யுள் இன்றளவும் மனிதனை அறநெறியில் வழிநடத்துகிறது. சாதி, மதம் பேதம் இந்த மூன்றையும் கடந்த நூலாய் திருக்குறள் உள்ளது. அதனால் தான் திருக்குறளின் சிறப்பை உணர்ந்த மக்கள் அதை அவரவர் மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்தனர்.



திருவள்ளுவரை குறித்து சரியான ஆதாரங்கள் இல்லை. இவர் ஒரு ஞானியா? தீர்க்கதரிசியா? கடவுளா? என பல சந்தேகங்கள் உண்டு.

திருவள்ளுவர் ஆதி பகவன் பெற்றோருக்கு பிறந்ததாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. திருவள்ளுவரின் இயற்பெயர் மற்றும் அவர் வாழ்ந்த ஊர், இடம் சரியாக தெரியவில்லை.

கி.மு. முதல் நூற்றாண்டில் தற்போதைய சென்னையில் உள்ள மயிலாப்பூரில் வாழ்ந்து வந்தார் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. காவிரிப்பாக்கத்தில் வசித்து வந்த மார்க்செயன் என்பவர் திருவள்ளுவரின் கவிதிறனை கண்டு அவரது புதல்வியான வாசுகியை வள்ளுவர்க்கு திருமணம் செய்து வைத்ததாகவும் கூறப்படுகிறது.

இவர் மதுரை நகரில் வாழ்ந்ததாகவும் ஒரு கருத்துண்டு. கடைச்சங்க காலமான கி.பி.400 க்கும் கி.பி. 100 க்கும் இடைப்பட்ட காலத்தில் மதுரையை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எனும் பாண்டிய மன்னன் ஆண்ட பொழுது திருவள்ளுவர் பற்றிய குறிப்புகள் ஓலைச்சுவடிகளில் காண்ப்படுகின்றன.

அதாவது திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றுவதற்கு திருவள்ளுவர் சிரமபட்டதாகவும் முடிவில் ஔவையாரின் உதவியுடன் திருக்குறளை அரங்கேற்றினார், என்றும் கூறப்படுகிறது.

திருவள்ளுவருக்கு தேவர், நாயனார், தெய்வப்புலவர்,செந்நாப்போதார், பெருநாவலர்,பொய்யில் புலவர், பொய்யாமொழிப்புலவர், மாதனுபங்கி,



முதற்பாவலர் என பல சிறப்பு பெயர்கள் உள்ளது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என பாரதியார் வள்ளுவரை சிறப்பித்து பாடியுள்ளார். "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே, புகழ் வையகமே " என பாரதிதாசன் புகழ்ந்து பாடியுள்ளார்.

திருக்குறளை தவிர திருவள்ளுவர் வேறு சில நூல்களையும் இயற்றியுள்ளார். 1.ஞான வெட்டியான் மற்றும் பஞ்சரத்னம். இந்த இரண்டு நூல்களும் ஆயுர்வேத மருந்துகள் குறித்த தகவல்களை அளிக்கிறது.

திருவள்ளுவர் திருக்குறளில் எந்த கடவுளையும் குறிப்பிட்டு கூறவில்லை. திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறக்கோட்பாடுகள் சமணசமய நீதியை நெருங்கி உள்ளதால் திருவள்ளுவர் ஒரு சமணராக இருந்திக்க கூடும் என்று வரலாற்றாளர்கள் கருதுகிறார்கள்.

சைவ சமயத்தை சார்ந்தவர்கள் திருவள்ளுவரை ' திருவள்ளுவ நாயனார் ' என அழைக்கின்றனர். திருவள்ளுவர் சைவ சமயத்தை சேர்ந்தவர்கள் என்றும் சிலர் கருதினர். சிலர் திருவள்ளுவரை புத்தமதத்தை சேர்ந்தவர் என்றும், சிலர் கிறிஸ்தவர் என்றும் பொய்யான தகவலை பரப்பி வருகிறார்கள்.

திருவள்ளுவர் பிறந்த இடமான மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயில் கட்டப்பட்டுள்ளது. முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையை தமிழக அரசு நிறுவியுள்ளது. இந்த சிலையை வடிவமைத்தவர் பிரபல சிற்பி வி.கணபதி ஸ்தபதி என்பவர். இதனை வடிவமைக்க 10 ஆண்டுகள் தேவைப்பட்டது என இதை வடிவமைத்த சிற்பி கணேசன் கூறியுள்ளார்.

சென்னையில் வள்ளுவர் கோட்டம் திருவள்ளுவர் நினைவாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும்,1330 குறளும் குறள் மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள ரஸ்ஸல் ஸ்குவேரில் இருக்கும் ஸ்கூல் ஆஃப் ஓரியண்டல் மற்றும் ஆப்ரிகன் ஸ்டடீஸ் (School of Oriental & African Studies) எனும் கல்வி நிறுவனத்தில் திருவள்ளுவரின் திருவுருவ சிலை நிறுவப்பட்டுள்ளது.

கி.மு. 31 ல் திருவள்ளுவர் பிறந்துள்ளார் என்பதன் அடிப்படையில் அவர் பிறந்த ஆண்டை ஆதாரமாகக் கொண்டு தி.மு, தி.பி என்று காலத்தை பிரித்து பயன்படுத்துகிறார்கள். மறைமலை அடிகள் செய்த



ஆராய்ச்சியின் பயனாய் தமிழ் நாட்டில் ஆண்டுகளைக் குறிக்க திருவள்ளுவர் ஆண்டும் பயன்படுத்தப்படுகிறது.

திருவள்ளுவர்ஆண்டு என்பது பொது ஆண்டோடு 31 ஆண்டுகளை கூட்ட வேண்டும்.

பதினென்கீழ்கணக்கு எனப்படும் நூல்களின் திரட்டில் திருக்குறள் காணப்படுகிறது. ஈரடியில், அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பத்து ஈரடி குறள்கள் என மொத்தம் 1330 குறள் உள்ளது.

1.அறத்துப்பால்: பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல்,ஊழியல் என்ற உட் பிரிவுகளோடு 38 அத்தியாயங்களை கொண்டுள்ளது.

2.பொருட்பால்: அரசியல், அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல் போன்ற உட்பிரிவுகளோடு 70 அத்தியாயங்களை கொண்டுள்ளது.

3.இன்பத்துப்பால் :களவியல் கற்பியல் என 25 அத்தியாயங்களை கொண்டுள்ளது.

திருக்குறளுக்கு வழங்கப்படும் சிறப்பு பெயர்கள்: திருக்குறளை சிறப்பிக்கும் விதமாக உலகப் பொதுமறை, முப்பால், ஈரடி நூல்,உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை திருவள்ளுவம் போன்ற பெயர்களால் திருக்குறள் அழைக்கப்படுகிறது.

1. திருக்குறளில் மொத்தம் உள்ள எழுத்துக்கள் - 42,194.

2.முதன் முதலில் ஓலைச்சுவடியில் இருந்து திருக்குறள் அச்சடிக்கப்பட்ட ஆண்டு - 1812.

3."தமிழ்" என்ற வார்த்தை திருக்குறளில் இல்லை.

5. 3, 9 என்ற எண்களை தவிர திருக்குறளில் மற்ற வரிசை எண்கள்

ஏராளமாகக் கையாளப்பட்டுள்ளது.

திருக்குறளுக்கு 10 ஆம் நூற் றாண்டில் உரை விளக்கம் வழங்கியவர் மடக்குடவர். 13 ஆம் நூற்றாண்டில் உரை வரைந்தவர் பரிமேலழகராகிய வண்துவரைப் பெருமாள். இந்நாள் வரை 300 க்கும் மேற்பட்டோர் உரைகள் தந்துள்ளனர். திருக்குறளை 1595ஆம் ஆண்டு மலையாளத்தில் மொழிபெயர்த்தவர் இராமசாமி. 1730 ஆம் ஆண்டு லத்தீனில் வழங்கியவர் வீரமாமுனிவர். ஆங்கிலத்தில் நல்கியவர் கிண்டர்சுலி (1794). விவிலியத் திருநூல் போன்று பெருமை செய்தவர் சார்ச்சு யுக்ளோ போப்பு (1886). ஆங்கிலத்தில் மட்டும் 50 க்கும் மேற்பட்டோர் உரை வழங்கியுள்ளனர்.

நரிக்குறவர் பேசும் "வக்கிரபோலி' மொழியில் கிப்டு சிரோமணி ஆக்கிய திருக்குறள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றுள்ளது. கொரிய மொழிபெயர்ப்பு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளிவந்துள்ளது. "உலகப் பொதுச் சட்டம்' என்று திருக்குறளை முன்னீர்ப் பள்ளம் பூரணலிங்கம் போற்றினார்; "உலகின் விழுமிய எழுத்தோவியம்' என்று திரு.வி.கலியாணசுந்தரம் பாராட் டினார். பன்னாட்டு நிறுவனமாகிய, உலகக் கல்வி அறிவியல் பண்பாட்டு மையம், "உலகின் ஒப்பற்ற நூல் திருக்குறள்' என்று பறைசாற்றுகிறது.

வயிற்றுப்புசத்தைக் குணமாக்கும் புதினாக்கீரை!



வயிற்றுவலி, வயிற்றுக்கோளாறு, வாந்தி, இருமல்,வயிற்று உப்புசம், ஆஸ்துமா,மூட்டுவலி, வாயுத்தொல் லை, மஞ்சள்காமாலை,பசியின்மை, மலச்சிக்கல்,மன இறுக்கம்,மூட்டுவலி, சிறுநீர் கழிக்க சிரமம்,சிறுநீரில் கல், கல்லீரல் மற்றும் நுரையீரல் கோளாறுகள், தோலில் வறட்டுத் தன்மை, சுவகைளை உணர முடியாத நாக்கு, பித்தம்,ஆகிய அனைத்து நோய்களையும் குணமாக்கவல்ல அரிய கீரை, புதினாக்கீரையாகும்.

புதினா உணவிற்கு நறுமணமூட்டும் உயர்ந்த வகை மூலிகையும் ஆகும். நறுமணமுள்ள சாஸ்வகைகள், பழச் சாறுவகைகள் தயாரிக்கும் போது புதிய புதினாக்கீரைகளையோ உலர்ந்த புதினா இலைத் தூளையோ உப யோகிக்கின்றனர். இக்கீரையில் இருந்து எடுக்கப்படும் எண்ணெயை, பற்பசைகள், மருத்துவப்பொருள்கள், மிட்டாய், சூயிங்கம் முதலிய தயாரிப்புகளிலும் முக்கிய மூலப் பொருளாய் பயன் படுத்துகிறார்கள்.

வயிற்று உப்புசத்திற்கும், நரம்புத் தளர்ச் சிக்கும், அரியமருந்து புதினாக் கீரையாகும். புதிதாகப் பறித்த புதினாக் கீரை 50 கிராம் எடுத்து நன்கு சுத்தம் செய்து மிக்ஸியில் அரைத்து சாறெடுத்து அருந்தினால் நன்கு செரிமானமும் ஆகும். நன்கு பசியெடுக்கும், ஒருகப் சாற்றில் தலா ஒரு தேக்கரண்டி எலுமிச்சை இரசமும் தேனும் சேர்த்து

அதிகாலையில் அருந்த வேண்டும்.

இதனால் காலை நேர வயிற்றுப் போக்கு, பித்தமயக்கம், காலையில் எழுந்ததும் ஏற்படும் காய்ச்சல், சிறுநீர்ப்பைகளில் உள்ள கல்லடைப்புகள், வயிற்றுப்பொருமல், குழந்தைகளின் மலக்குடலில் உள்ள கீரைப் பூச்சிகள் முதலியன உடனே குண மாகும். வாந்தி, குமட்டல், பசியின்மை போன்ற கோளாறு உள்ளவர்கள் புதினாத்துவையல், புதினாசட்னி என்று தயாரித்து சேர்த்துக்கொள்ள வேண்டும். புதினாக்கீரையுடன் புளி, கறிவேப்பிலை, உளுத்தம் பருப்பு முதலியவற்றைச் சேர்த்து, முதலில் வதக்கி பிறகு அரைத்துத் துவையல் செய்ய வேண்டும்.

அடிக்கடி வயிற்றவலியால் வருந்துபவர்கள் இந்த முறையில் துவையல் செய்து, பலகாரம், சாதம் முதலியவற்றுடன் பிசைந்து சாப்பிட்டால் வயிற்று வலி பூரணமாய்க் குணமாகும். இக்கீரையைப் பச்சடியாகக் சமைத்துச் சாப்பிட்டாலும் வாந்தி, பசியின்மை அகலும். புதினாக் கீரையுடன் இஞ்சியும், மிளகும் சேர்த்துப் பச்சடி தயாரிக்க வேண்டும்.

மூச்சுவிடச் சிரமப்படுபவர்களும், ஆஸ்தமா நோயாளிகளும், எலும்புருக்கி மற்றும் வறட்டு இருமல், சளி முதலியவற்றால் அவதிப்படுபவர்களும் பின் வருமாறு உட்கொள்ள வேண்டும். ஒரு தேக்கரண்டி புதினாச்சாற்றுடன் தலா இரு தேக்கரண்டி வினிகர், தேன், நான்கு அவுன்ஸ் காரட் சாறு ஆகியவற்றைக் கலந்து, தினமும் மூன்று வேளை அருந்த வேண்டும்.

இது சிறந்த மருத்துவ டானிக் ஆகும். மேற்கண்ட நோய்களுக்கு வேறு எம்மருந்து உட்கொள்பவரும் இந்த டானிக்கை உட்கொள்ளலாம். இது கட்டியான சளியை நீர்த்துவிடச் செய்துவிடுகிறது. டி.பி. மற்றும் ஆஸ்துமா தொடர்பான நோய்க் கிருமிகள் வந்து தாக்கமுடியாதபடி நுரையீரல்களுக்கு நல்ல ஊட்டச்சத்தையும் இந்த டானிக் வழங்குகிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. அதனால் ஆஸ்துமாகாரர்கள் மூச்சுவிடச் சிரமப்படாமல் நிம்மதியாய் இரவில் தூங்கலாம்.

பச்சையாக மென்று புதினாக்கீரையை சாப்பிட்டால் பல் ஈறுகள் பலம் பெறும். தினமும் காலையும் மாலையும் தேயிலைத் தூளிற்குப் பதிலாகப் புதினாத் தூளைப் பயன்படுத்தித் தேநீர் தயாரித்து அருந்தினால் ஒவ்வொரு நாளும் புத்தம் புது துடிப்புடன் கழியும், சுறுசுறுப்பும் ஆரோக்கியமும் ஏற்படும். புதினாத்தேநீர் தயாரிக்கும் போது பாலும் சேர்த்துத்தான் தயாரிக்க வேண்டும். பால்சேர்த்துத் தயாரிக்கப்பட்ட புதினாத் தேநீர் வயிற்றுவலியைப் போக்கி நலம் பயக்கும்.

மாதவிடாய் தாமதமானால், மூன்று அல்லது நான்கு நாள்கள், ஒரு தேக்கரண்டிப்பொடியைத் தேனில் கலந்து தினமும் இருவேளை உட்கொண்டால் மாதவிடாய் தாமதமாவது தடுக்கப்படும்.

முகத்தில் பருக்கள் உள்ளவர்களும், வறண்ட தோல் உள்ளவர்களும் இரவில் படுக்கைக்குச் செல்லும் போது, புதினாக் கீரையைச் சாறாக்கி அதை உடலிலும், முகத்திலும் தடவிக் கொள்ள வேண்டும். காலையில் இரண்டு தேக்கரண்டி புதினாக்கீரைப் பொடியைத் தேன்கலந்து உட்கொள்ள வேண்டும் அல்லது தண்ணீருடன் சேர்த்து அருந்த வேண்டும்.

இத்தனை சிறப்புக்கள் கொண்ட புதினாக் கீரையின் தாயகம், ஐரோப்பா. இரண்டாயிரம் ஆண்டுகளாக ஜப்பானியரும் சீனரும் இக்கீரையைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்தோனிஷியா, மேற்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் இக்கீரை, அதிகம் பயிராகிறது. மற்ற நாடுகளில் இது ஓரளவு பயிராகிறது.

இந்தியாவில், இயற்கை மருத்துவர்கள் இக்கீரையைப் பொடியாகத் தயாரித்துப் பெரும்பாலான மக்களுக்குத் தினமும் ஆரோக்கிய மருந்து போல் கொடுப்பது கவனத்துக்குரிய ஒன்றாகும்.

SOUNDS GOOD

BOOK FOR EVENTS

LIGHT MUSIC ORCHESTRA

Wedding | Birthday | Corporate Get together Events







- Light Music
- Karaoke
- Instrumental Music
- DJ Music

Sounds Good
www.soundzgood.in

95 66 16 76 80
saai_archana_vr

SOUNDSGOOD Musically the best
SoundsGood Music Group

தனம் மசாலா

சாம்பார் மசாலா, தனி மிளகாய் பொடி, மஞ்சள் பொடி, பிரியாணி மசாலா, கரம் மசாலா மற்றும் தரமான மசாலா தயாரிப்புகள்.



சுத்தமான, தரமான, வீட்டுத் தயாரிப்பு, கலருக்கும், சுவைக்கும் ரசாயனம் சேர்க்கப்படவில்லை.

தனம் மசாலா, NO: 2/13, புதுத் தெரு, திருநீர்மலை, சென்னை– 44. போன்: 9080599587.

ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்

– அகஸ்டின்

“சாய் தியானாலயா ஆத்மஞான பீடம்” கடந்த 2014 ஆம் ஆண்டு, குண்டலினி யோக குரு, “ஞான யோகி” திரு.ஸ்ரீராம் அவர்களால் பொதுமக்களின் சேவைக்கென சென்னை அயனாவரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

சாய் தியானாலயாவில், கிரியா, யோகா,தியானம், யோக சிகிச்சை, மவுனம், சத்சங்கம், மனநல ஆலோசனைகள் போன்றவை மக்களுக்கு கற்றுத் தரப்படுகின்றன.

அதுமட்டுமின்றி, அண்டி ணோர்க்கு அன்னவளமும், வேண்டி ணோருக்கு ஞான வளமும் என்ற கொள்கை பிடிப்போடு செயல் படும் “சாய் தியானாலயா” இது வரை தொடர்ந்து 295 வது வார மாக இல்லாதவர் களுக்கும், இயலாத வர்களுக்கும், அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்ன தானம் வழங்கி வருகின்றது.

அதோடு மட்டுமின்றி, குண்டலினி யோகியான நமது குரு அவர்கள் எண்ணற்ற ஆர்வமுள்ள சாதகர்களுக்கு குண்டலினி யோகத்தினை கடந்த பத்தாண்டுகளாக ஞாயிறுதோறும் இலவசமாக தொடர்ந்து கற்றுத் தருகின்றார்கள்.

மேலும், பகவான் சாயிநாதரின் புகழ்பரப்பும் “சாயி மகராஜ் குருவைத்



தேடி” மாத இதழையும் சாயிநாதரின் ஆசியுடன் திறம்பட நடத்தி வருகின்றார்கள். நமது குரு ஸ்ரீராம் அவர்கள், தன்னை நாடிவரும் எத்தனையோ அடிய வர்களின் எண்ணற்ற பிரச்சனைகளை, பகவான் சாயிநாதரின் ஆசியுடன் தீர்த்து வைத்திருப்பதை நாம் நன்கு அறிவோம்.

அவரின் சேவைகள் அநேக அடியவர்களுக்கு சென்று சேர



வேண்டும். முட்டாள்தனமான, முடநம்பிக்கையான, ஆன்மீகத்தை விடுத்து மெய்ஞானப்பாதையில் சாயி பக்தர்கள் பயணித்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, “சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்” என்ற அமைப்பை நமது குரு ஸ்ரீராம் அவர்களின் அனுமதியுடன் துவக்கியிருக்கின்றோம்.

அதன் முதற்கட்ட முயற்சியாக நிலம் வாங்குவதற்குண்டான முயற்சிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. தற்சமயம் தாம்பரம் TO பூந்தமல்லி (வழி: சோமங்கலம்) பைபாஸ் சாலை யில் மலைப்பட்டு நிறுத்தத்தில் இருந்து ஐந்து கி.மீட்ட ரில் தூரத்தில் உள்ள அழகிய கிராம மான அழகூர் என்ற இடத்தில் நிலம் பார்க்கப்பட்டிருக்கின்றது. இம்மாத இறுதிக்குள் ஏனைய பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைப்பதற்கு உங்களது மேலான ஆதரவை நாடு கிறோம். காணிக்கை அளிக்க விரும்பினால் “சாய் தியானாலயா” ஜி பே எண்: 9941816692 மேலும் விபரங்களுக்கு திரு. அகஸ்டின் (97103 33503) அவர்களை தொடர்பு கொள்ளவும். நன்றி!

– ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைப்புக் குழு. சென்னை 23.

சாயி பக்தர்கள் அனைவரும் இந்த தர்ம காரியத்தில் பங்கெடுத்துக் கொள்ளும்படி வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம். “சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்திற்கு” நன்கொடை அளித்தவர்கள்:



திரு. அசோக்குமார் சி.சி.பேங்க மேலாளர். பெரம்பூர். ரூ.100000

திரு.பி.பரமசிவம் தாம்பரம் மாநகராட்சி கவுன்சிலர் ரூ. 25000.

திருமதி.வாசுகி கண்ணன். குடந்தை.ரூ.10000.

திரு.பலராமன். கோவை. ரூ.5000.

திரு.அய்யாகண்ணு குரோம் பேட்டை பாக்ஸிங் கிளப் ரூ. 5000.

திரு.சுந்தரவடிவேலு ராயபுரம் ரூ.3000

திரு. எஸ்.டி. கொரியர்அயனாவரம். ரூ.2000.

திரு.சாந்தமூர்த்தி போரூர்.ரூ. 1000

திரு.பாலசுப்பிரமணியன் திருவல்லிக்கேணி. ரூ.500

திரு.சந்தோஷ் பேன்சி ஸ்டோர். வில்லிவாக்கம். ரூ.200

திரு.நாராயணன் வில்லிவாக்கம். ரூ.200.



S. SHANTHI
Insurance Consultant
LIC0375871D

I.T. ரிட்டேன், GST ரிட்டேன்,
அக்கவுண்ட மெயிண்டனஸ்,
ROC பைலிங், TAX பைலிங்.

No: 5, Mandaveli, Chennai - 600028.

E- Mail: Shanthisiva23@Gmail.com

Cell: 98409 07345, 94457 17217

நமது சாய் மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழில் "குண்டலினி யோகி" ஆசிரியர் திரு.வே.ஸ்ரீராம் அவர்கள் எழுதி, சாயி பக்தர்களின் பேராதரவைப் பெற்ற "குருவைதேடி" தொடர் தனிப்புத்தகமாக தயாராகிக் கொண்டிருக்கின்றது. ஆகஸ்ட் மாதம் நமது இதழின் 7 ஆம் ஆண்டு விழாவில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.



விபரங்களுக்கு:

"சாய் மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழ்
அயனாவரம், சென்னை – 23.
போன்: 9941816692, 8825831068

சேவையும், தொண்டும்!

பாபா சாகேப் எனப்படும் நீலகண்டனும் தாத்யா சாகேப் நூல்கரும் பள்ளிப் பருவத்தில் இருந்து உயர்நிலைக் கல்வி வரையில் ஒன்றாகப் பயின்ற நண்பர்கள். காலமும், விதியும் அவர்கள் இருவரையும் இரு வேறு திசைகளில் பிரித்து விட்டது. நூல்கர் பண்டரிபுரத்திற்குச் சென்றபின்பு நீலகண்டனுக்கு அவருடைய தொடர்பு விட்டுப்போனது.

மிகவும் அன்பானவரும், பழகுவதற்கு இனியவருமான, நீலகண்டன் மிகுந்த ஆன்மீக நாட்டமுடையவர். வேதங்களையும், உபநிடதங்களையும் கசடறக் கற்றதோடு அவற்றின் வழிபிறழாது நடந்து வந்தார். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ஞானிகளுடனும், சத்புருஷர்களோடும் தொடர்பு கொண்டு அவர்களின் சத்சங்கத்தில் இருந்து ஆன்மீக ஞானச் செல்வத்தை பெற்றுக் கொள்ள தவறமாட்டார்.

அவர் ஒரு சமூக சீர்த்திருத்தவாதியாக, பெண் கல்வி, பால்ய விவாகம், விதவை மறுமணம் போன்றவற்றிலும், பெண்களின் உரிமைக்காகவும் குரல் கொடுப்பதில் எப்போதும் முன்னணியில் இருந்தார். மேலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எங்கெல்லாம் குரல் தேவைப்பட்டதோ அங்கெல்லாம் இவரின் குரல், முதல் குரலாக ஒலித்தது.

1904 ஆம் ஆண்டு பிளேக் நோய் பரவியபோது, அவருடைய நேரம், செல்வம், உழைப்பு அனைத்தையும் பிளேக் நோயாளிகளுக்காவே செலவிட்டார். பெரும்பான்மையான



உறவினர்களே செய்யத்தயங்கிய இறந்தவர்களை தாமே சுமந்து சென்று இடுகாட்டில் எரித்து வந்தார்.

பல்வேறு பதவிகளை வகித்து வந்தவர், இராணுவ கணக்காளராக வும், பாம்பே நகராட்சி செயலாளராகவும், போஸ்லே அரச குடும்பத்திற்கு மேலாளராகவும் சில காலம் பணிபுரிந்தார்.

ஒரு முறை அவரது நண்பர் ஒருவர் குருவின் முக்கியத்துவம் பற்றி அவரிடம் வினவ, அதற்கு அவர், குருவானவர் சந்தையில் கிடைக்கும் பொருள் அல்ல, சாதகன் தன்னுடைய காமம், குரோதம்,மோகம்,மதம்,லோபம், மாத்சர்யம், என்ற ஆறு எதிரிகளை வென்றவனாகவும், பொறுமையாகவும் இருக்கும் பட்சத்தில் குருவே தன்னுடைய கருணையை அவன்மீது அபரிதமாக பொழிவார் என்றும் விடையளித்தார்.

1911 ஆம் ஆண்டில் நானா சாகேப் சந்தோர்கர் இராகிருஷ்ணமாயி கேட்டதற்கிணங்க, சமையல் பாத்திரங்கள் சிலவற்றை சீரடிக்கு அனுப்பிட விரும்பினார். இப்பணிக்கு பொறுத்தமான நபருக்காக காத்திருந்த வேளையில் தற்செயலாக நீலகண்டனை சந்திக்க நேர்ந்தது.



அப்போது நானா அவரிடம் இதுபற்றிக் கூறியபோது, நீலகண்டன் பாத்திரங்களை சீரடிக்கு கொண்டுபோக ஆகும் செலவிற்கு என்னிடம் பணம் இல்லை என்றார். பிறகு நானாவே அனைத்து ஏற்பாடுகளையும் செய்து அவரை சீரடிக்கு அனுப்பி வைத்தார்.

சீரடிக்கு சென்ற நீலகண்டன் அங்கு தன்னுடைய பால்ய நண்பன் தாத்யா சாகேப் நூல்கரைக் கண்டு இன்ப அதிர்ச்சியடைந்தார்.

நீலகண்டன் சீரடிக்குச் சென்ற புதிதில் பாபாவின் தர்பாரில் சத்சங்கம் நடக்கும். அதில் பாபா பேசும் பரிபாஷையான கருத்துக்கள் யாருக்கும் புரியாதவையாக இருக்கும். அதை நூல்கரும், மற்ற பக்தர்களும் புரிந்து கொள்ள முயற்சிப்பதைக் கண்ட நீலகண்டன் அவர்களை மனநோய் காப்பகத்தில் இருக்க வேண்டியவர்கள் என்று திட்டுவார்.

அவர் பாபாவின் தரிசனத்திற்குச் சென்ற போது, பாபா அவரிடம் பரிபாஷையாக, "நூல்கருக்கும், ஜோக்குக்கும் நமஸ்காரம் செய்வதால் உன் மதிப்பு ஒன்றும் குறைந்து விடாது. உனக்கு நஷ்டமும் கிடையாது, நீ இருவருக்கும் சேவை செய்" என்று கூறினார். இதையே நீலகண்டனிடம் தொடர்ந்து மூன்று நாட்கள் கூறிக்கொண்டே இருந்தார்.

நீலகண்டன் சீரடியை விட்டு புறப்படுவதற்காக, ஷாமா மூலம் பாபாவின் அனுமதியைக் கோரி வந்தார். (பாபாவின் தரிசனத்திற்கு வந்தவர்கள் பாபாவின் அனுமதியைப் பெற்றே சீரடியை விட்டுச் செல்ல வேண்டும் என்ற வழக்கத்தின் படி) முதலில் பாபா, "அவன் நான்கைந்து நாட்கள் கழித்து புறப்படட்டும்" என்றார்.

ஆனால் நான்கைந்து நாட்களுக்குப் பின்பு மீண்டும் அவருக்காக நானா அனுமதி கேட்ட போது, "அவன் மசூதிக்கு எதிரில் நாய் போல் கிடக்கட்டும் அவனுக்கு சில முக்கியமான வேலைகள் இருக்கின்றன" என்றார்.

எனவே நீலகண்டன் சீரடியிலேயே தங்கிவிட முடிவு செய்தார். அவர் தன் பால்ய நண்பரான நூல்கரிடம், உனக்கு


நான் என்ன சேவை செய்ய வேண்டும் என்று உன் குரு விரும்புகிறார் என்று கேலியாகக் கேட்பார்.

ஆயினும் பாபாவின் வார்த்தை களுக்கு ஆழ்ந்த பொருள் இருக்கும் என்றும், அதைக் காலமே உணர்த்த முடியும் என்றும் நூல்கர் திடமாக நம்பினார். சீரடியில் தங்கியிருந்தபோது நீலகண்டன் பல அற்புத அனுப வங்களை பெற்று, பாபாவே அனைவர் இதயங்களிலும் உறையும் சர்வாந்தர்யாமி என்பதை நன்கு உணர்ந்து கொண்டார்.

நீலகண்டனுக்கு அவ்வப்போது ஐயங்கள் எழும் போது பாபா அவரை தட்சணை வாங்கி வருதல் என்ற பெயரில், பாபு ஜாகேப் ஜோக்கிடமோ, அல்லது காகா சாகேப் தீட்சித்திடமோ அனுப்புவார். இவர் தட்சிணை கேட்கப் போகும் சமயம் அங்கு அவர்கள் பாராயணம் செய்து கொண்டிருக்கும் அத்யாயம் அவருடைய ஐயங்களுக்கு பொறுத்தமான விடையாக இருக்கும்.

இப்படி நீலகண்டனுக்கு பாபாவிடம் பக்தி பல்கி பெருகியது. இதற்கிடையே நூல்கர் திடீரென நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு உடல்நலமில்லாமல் ஆனார். அவரது உடலெங்கும் கட்டிகள் தோன்றி அச்சம் கொள்ளும் விதத்தில் வேகமாகப் பரவியது.

நீலகண்டன் நூல்கரை அருகில் இருந்து கவனித்துக் கொண்டார். அவருடைய புண்களுக்கு மருந்திட்டு கட்டுப்போட்டுவிட்டார். நூல்கர் படுத்த படுக்கையாகிப் போய் எழுந்திருக்க முடியாமல் இருந்த போது நீலகண்டன்தான் அவருக்கு குடிக்க தண்ணீர் கொடுப்பது, சிறுநீர் கழிக்க உதவுவது போன்ற சேவைகளை மனம்



நோகாமல் செய்து வந்தார்.

ஆனால் நூல்கரோ, நீலகண்டனின் சேவையில் மனம் நெகிழ்ந்து தன் நண்பருக்கு சிரமம் கொடுக்கின்றோமே என்று மன வருத்தம் அடைந்தார். ஆனால் நீலகண்டனுக்கோ மன வருத்தம் ஒன்றும் இல்லை.

சகலத் தையும் அறிந்த தேவன் சாயிநாதன் முன்பே "நூல்கருக்கு சேவை செய்வதால் உனது மதிப்பு ஒன்றும் குறைந்து விடாது" என்று தமக்கு நடக்கக்கூடிய வற்றை முன்பே உணர்ந்து கூறக்கூடிய தெய்வத்திடம் அல்லவா அவர் அடைக்கலமாகி இருக்கிறார்.

தாத்யா சாகேப் நூல்கர் மரணமடை யும் வரை நீலகண்டன் அவருடனே இருந்து அவருடைய ஒவ்வொரு தேவைகளையும் பார்த்துப் பார்த்து கவனித்துக் கொண்டார். சாயியினுடைய வாக்கில் நீலகண்டனுக்கு அவ்வளவு மரியாதை இருந்தது.

ஓம் சாய்ராம்.

வாசகர் குரல்

சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மலரை எங்களுக்கு மாதந்தோறும் உருவாக்கித் தரும் எங்களது குருஜியும், ஆசிரியருமான திரு.ஸ்ரீராம் அவர்களுக்கு, அநேக கோடி நமஸ்காரங்கள். மார்ச் மாத இதழில், 43 ஆம் பக்கத்தில் வெளியான கடவுளின் மொழி, பெட்டிச்செய்தி என் மனதை மிகவும் கவர்ந்தது. பலவிதமான எண்ணங்களுடன் படிக்கத் துவங்கிய நான் கடவுளின் மொழி மவுனம் என்பதை படித்ததும் மனம் எண்ணங்களை நிறுத்திக்கொண்டு மவுனமானது. மிக்க நன்றி!

- ப.இந்துமதி, அயனாவரம், சென்னை23

எனது மனம் கவர்ந்த தொடரான "குருவை தேடி" என்னும் புனித நதி, ஆசிரியர் ஸ்ரீராம் அவர்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்து, வயல் வெளிகளான வாசகர் நெஞ்சங்களில் பாய்ந்து, நாசிக்கை அடைந்து, கோதாவரியில் கலந்து, சீரடி நோக்கி சீறிப்பாய்ந்து, சாய்நாதன் என்னும் கருணைக் கடலில் கலந்து விட்டது.

வாழ்த்துக்கள். அருமை.

- டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, கோவை.

நமது இதழில் வெளிவரும் பெட்டிச் செய்திகள் அனைத்தும் நெத்தியடி போல் இருக்கிறது. மனசாட்சி என்ற தலைப்பில் நீங்கள் எழுதிய "பொய்யை மென்மையாக கூறினால் ஏற்றுக் கொள்வார்கள். உண்மையை வன்மையாக கூறினால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்பது நூற்றுக்கு நூறு உண்மை. எதை சொல்கிறோம் என்பதை விட எப்படி சொல்கிறோம்



என்பதே முக்கியம். உங்கள் தமிழ் நடை மிகவும் அற்புதமாக இருக்கின்றது. தொடரட்டும் உங்கள் ஆன்மீகப் பணி. இதே போன்று குட்டிச்செய்திகள் நிறைய வெளியிடுங்கள்.

- திருமதி. லதா பாஸ்கரன், அண்ணாநகர், சென்னை.

புத்தகம் கையில் கிடைத்ததுமே என் கண்கள் தேடுவது, அமுத மொழிகளைத்தான். ஒவ்வொரு மாதமும் சாயிநாதர் எனக்கே கூறுவது போல் இருக்கின்றது. வாழ்க உங்கள் தொண்டு, வளர்க உங்கள் பணி!

- கி. ராஜராஜன், பாபாநாசம், தஞ் சாவூர்.

ஆசிரியர் அவர்கள் எழுதி பிப்ரவரி

மாதம் நிறைவு பெற்ற " குருவைதேடி" தொடர் மிகவும் அற்புதமாக இருந்தது. ஆசிரியரின் குருவை தேடிய அனுபவங்கள் பரபரப்பான திகில் கதையைப்போன்று சென்றது. அவசியம் "குருவைதேடி" தொடரை புத்தகமாக வெளியிடவும்.

- மு. இராஜேஸ்வரி நாமக்கல்.

சாயி மகராஜ் குருவை தேடியில் வெளிவரும் சாயி கதைகள், கட்டுரைகள், தொடர்கள், மருத்துவம், சித்தர் கட்டுரை, மாதம் ஒரு மகான், சின்ன, சின்ன செய்திகள் அனைத்துமே என் மனம் கவர்ந்தவையே. மிக அருமை! வாழ்த்துக்கள்.

- பேராசிரியர். கமலக்கண்ணன் மதுரை.

இணை ஆசிரியர் ஜெயந்தி ஸ்ரீராம் அவர்கள் எழுதும் சாயி லீலா என் மனம் கவர்ந்த தொடர். மாதம் ஒரு மருத்துவ காய்கறியும் அற்புதம். மற்றபடி சாயி கதைகளும், செய்திகளும், இனிமையோ இனிமை.

- திருமதி. வத்சலா கோபாலன்

அகமாற்றம்!



இறைவன் பாபா நமக்குள்ளே இயங்குகிறார்! இதை எப்படி உணர்வது? எப்போது அக மாற்றம் அடைந்து வருகிறோமோ? அப்போது பாபா நமக்குள் இயங்குகிறார் என்பதை நாமே உணர்ந்து கொள்ள லாம்! அப்படி என்ன அக மாற்றம்?

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாகக் கோபப்படுகிறோமா? குறைவாக ஆசைப்படுகிறோமா? குறைவாக பதட்டப்படுகிறோமா? அடிக்கடி உணர்ச்சி வசப்படுவதில் இருந்து மனம் அடங்கி இருக்கிறதா? எதை எதையோ தேவையே இல்லாமல் யோசிப்பதில் இருந்து மனம் கொஞ்சமாவது வெற்றிடம் பெற்றிருக்கிறதா?

பயத்தை விட்டிருக்கிறோமா? கவலைப்படுவது கொஞ்சமாவது குறைந்திருக்கிறதா? முகம் தெரியாத நபர்களிடம் போலித்தனம் இன்றி புன்னகை செய்திருக்கிறோமா? பாபாவை பற்றியே அறியாதவர்களிடம் "பாபா இருக்கிறார்! கவலைப்படாதே! என்று ஆறுதல் சொல்லி இருக்கிறோ மா? பொறுமை கூடி இருக்கிறதா?

பிறரை குறை சொல்வது நின்று, நம் குறைகளை காண ஆரம்பித்திருக்கி றோமா?

எந்த அளவிற்கு நாம் அக மாற்றம் அடைந்திருக்கிறோமோ, அந்த அளவிற்கே பாபா நமக்குள் இயங்குகிறார் என்பதை உணர முடியும் இப்படி ஆண்டுக்கு ஆண்டு படிப்படி யாக நாம் அக மாற்றம் அடைவது மட்டுமே வழிபாடாக பாபாவுக்கு சென்று சேர்கிறது! மற்றவை அனைத்தும் வெறும் நேர விரயமே!

பக்த ரத்தினம் பப்பாஜி லஷ்மண் ரத்னபார்கே



இவருடைய முன்னோர்கள் விலையுயர்ந்த வைரங்களையும், ரத்தினங்களையும், மதிப்பீடு செய்யும் வல்லுனர்களாக விளங்கியதால், அவர்களுக்கு ரத்னபார்கே என்ற குடும்பப் பெயர் ஏற்பட்டது.

பிராமணர்களான அவர்கள் பூஜாரிகளாக தொழில் செய்தனர். சீரடிக்கு குடிபெயர்ந்த அவர்கள் அதையே தங்களது சொந்த ஊராக ஆக்கிக்கொண்டனர். சீரடியில் 1886 ஆண்டு லட்சுமணன் யமுனா தம்பதியினருக்கு மகனாக பிறந்தார் பப்பாஜி. அப்போது அவரது தந்தை பூஜாரியாகவும், சோதிடராகவும் விளங்கினார்.

பப்பாஜி, பாபாவை தனது குழந்தைப் பருவத்தில் இருந்தே அறிந்ததனால் துவாரகாமாயிக்குள் அவர் நினைத்த போது எப்போது வேண்டுமானாலும் சுதந்திரமாக உலவி வந்தார். அவர் தனது பெரு பான்மையான நேரத்தை பாபாவுடனே கழித்துவந்தார்.

பாபா அவரை மிகவும் ஆழமாக நேசித்தார். அடிக்கடி அவர்கள் இருவரும் ஒன்றாக விளையாடிக் கொண்டிப்பதை காணமுடிந்தது. 1910 ஆம் ஆண்டு முதல் அவர் பாபாவிற்கு சேவை செய்ய ஆரம்பித்தார்.

சீரடியில் மராத்தி பள்ளிக்கூடத்தில் அவர் ஏழாம் வகுப்புவரை படித்தார். அவர் நாட்டுவைத்தியத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். கிராமத்தினரின் சின்ன சின்ன நேய்களுக்கெல்லாம் அவர் வைத்தியம் செய்து வந்தார்.

பழம் சம்பிரதாயங்களில் ஊறிப் போன அவரது தந்தையார், ஆச்சார அனுஷ்டானங்களைக் கடைபிடிப்பதில் கண்டிப்பாக இருக்கக்கூடியவர். ஒருமுறை பப்பாஜி நோய்வாய்ப்பட்டு உயிருக்கு போராடியபோது, அவருடைய தந்தையார் பாபாவிடம் பப்பாஜியை காப்பாற்றக் கோரி ஓடி வந்தார்.

பாபாவோ கொச்சையான வார்த்தைகளால் கடுமையாக உரத்த குரலில் அவரை ஏசி விரட்டியடித்தார். அதன் பிறகு சிறிது நேரம் சென்றதும், பாபா, பப்பாஜியின் இல்லத்திற்கு நேரில் சென்று தம் வரம் நல்கும் திருக்கரத்தை பப்பாஜியின் தலையில்

வைத்து ஆசியளித்தார். உடனடியாக பப்பாஜி உயிர் பிழைத்தார்.

இந்திகழ்ச்சி அவருடைய மூடத்தனமான பழைய சம்பிரதாயங்களை விடுத்து, பாபாவின் மேலான நம்பிக்கையையும், பக்தியையும் வலுப்படுத்தியது. பாபா எந்த வீட்டில் எழுந்தருளி பப்பாஜியை குணப்படுத்தினாரோ, அதே வீட்டில்தான் இன்றளவும் அவர்களது குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

அவர்களது வீடு விட்டல் ஆலயத்தின் பின்புறம் அமைந்துள்ளது. சாமாவிற்கு உறவினர்களான அவர்கள் கொடுத்த ஐம்பது சதுர அடி நிலத்தில்தான் தற்போது சாமாவின் வீடு அமைந்துள்ளது.

பப்பாஜியின் தந்தை நீரிழிவு நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு பாபாவின் தரிசனத்திற்கு செல்ல முடியாமல் படுத்த படுக்கையாக இருந்தார். ஆனால் பாபாவை தரிசிப்பதற்கு ஏங்கினார். அன்று மதியம் பப்பாஜி துவாரகாமாயியில் பாபாவிடம் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் சில குழந்தைகள் பாபாவிடம் வேடிக்கை செய்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு துணி வியாபாரி அந்தப்பக்கமாக துணிகளை விற்றுச் சென்றான். அந்த அழகிய துணிகளை பார்த்த பப்பாஜி, பாபாவிடம் தனக்கு ஒரு துணிவாங்கித்தர முடியுமா பாபா எனக்கேட்டார்.

அதற்கு சரியென்ற பாபா, சித்திரப்பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்ட சிகப்பு நிறத் துணியை வாங்கி பப்பாஜியின் தலையில் கட்டிவிட்டார். பிறகு பாபா வேடிக்கையாக பப்பாஜியின் கன்னத்தை பிடித்து கிள்ளினார்.



பதிலுக்கு அந்த துணியை எடுத்து பாபாவின் தலையில் கட்டிவிட்டு பாபாவின் கன்னத்தைப் பிடித்து கிள்ளினார் பப்பாஜி. பாபாவோ குழந்தைபோல் நடித்து மீண்டும் துணியை பப்பாஜின் தலையில் வைத்து விளையாடினார். இப்படியே ஓரிருமுறைகள் நடைபெற்றன.

ஆனால் விந்தையிலும் விந்தை இந்த அற்புதமான காட்சியை வீட்டில் நோய்வாய்ப்பட்டு படுத்திருந்த அவரது தந்தையால் தத்ருபமாகப் நேரில் பார்ப்பதைப் போன்று பார்க்க முடிந்தது.

காலப்போக்கில் வளர்ந்த இளைஞனான பப்பாஜி, பாபா மசூதியில் பிரசாதம் தயார் செய்யும் போதெல்லாம் பாபாவின் அருகிலேயே இருப்பார். பாபா வலியின் சுவடுகளோ, சுடுவதற்குண்டான அறிகுறிகளோ ஏதும் இன்றி தமது வெறும் கைகளால் கிளறி சர்க்கரைப் பொங்கல் சமைப்பதை அருகில் இருந்து பார்த்துக்கொண்டே இருப்பார்.

பல நேரங்களில் பாபா பதினாறு மடிப்புள்ள போளி தயார் செய்து அவற்றை துனியின் நெருப்பில் போட்டு வேக வைப்பார். அப்போதெல்லாம் பப்பாஜி பாபாவின் அருகில் இருந்து சமைப்பதற்கு உதவிகள் செய்து கொண்டிருப்பார்.

பாபா குளிக்கும் நாட்களில், பப்பாஜியிடம் பானையில் தண்ணீரும் வெந்நீரும் கொண்டுவரும்படி கேட்பார். அவற்றை கலந்து வெதுவெதுப்பான சரியான சூட்டில் குளிப்பார் பாபா. பப்பாஜி பாபாவின் முதுகை குளிக்கும் ஓட்டினைக்கொண்டு தேய்த்து விடுவார்.

பாபா குளித்தபிறகு, அவரது கோவணத்தை, மிக வேகமாக எப்போது மாற்றினார் என்று திகைக்கக்கூடிவாறு, ஒருவரும் பார்க்க இயலாத வண்ணம் பாபா கட்டிக்கொள்வதாக வியந்து கூறுகிறார் பப்பாஜி. பின் அவர் வழக்கமான கப்னி உடையை உடுத்திக் கொள்வார் என்றும் குறிப்பிடுகிறார்.

தினந்தோறும், சுமார் ஐநூறு ரூபாய் பாபாவால் விநியோகிக்கப்பட்டதாக பப்பாஜி கூறுகிறார். பாபா பப்பாஜியிடம் தினந்தோறும் பத்து ரூபாய் கொடுப்பார். அதைக்கொண்டு பப்பாஜி துனிக்கு தேவையான விறகுகளை

செயலுக்கு தகுந்த பலன்!



இறைவன் பாபா மாற்றி மாற்றிப் பேசுவதில்லை! மனிதனின் மனம் மாறி மாறி நடந்து கொள்வதால் அதன் போக்கிலேயே அதைத் திருத்த ஒவ்வொரு வழிமுறையையும் கை ஆள்கிறார்! கையால் தோண்டினால் ஈர மண்தான் கிடைக்கிறது! அதற்குரிய உபகரணங்களை வைத்துத் தோண்டினால் தங்கமே கிடைக்கிறது!

அந்த உபகரணங்கள் போலவே நம் வாழ்வில் நாம் எதிர் கொள்ளும் சம்பவங்கள்! அத்தகைய சம்பவங்கள் நம்மை திருத்தி பக்குவப்படுத்தவே நிகழ்கின்றன! அதிலும் நாம் திருந்தவில்லை எனில் நமக்கென்ன ஆன்ம லாபம் கிட்டும்?

சாயி சொல் என்பது வீரிய விதை! அது முளைத்தே தீரும்! அது போல் பாபா எதையும் தாமதமாக நிகழ்த்துவ தில்லை! அனைத்தையும் மிகச் சரியான நேரத்திலேயே நடத்துகிறார்! நம் பொறுமை இன்மையே தாமதம் என பாபாவை குறை பேசுகிறது! விதைகள் நொடியில் முளைப்பதில் லை! அதற்குரிய காலகட்டத்திலேயே முளை விடுகிறது!

எல்லாம் உடனே நடந்து விட வேண்டும் என்றால், நாம் மட்டும் என்ன பாபாவின் சொல்லை உடனே கேட்டு வாழ்க்கையில் கடை பிடிக்கிறோமா என்ன? நாம் எந்த அளவுக்கு பாபாவின் ஞான மொழிகளை வாழ்க்கையில் கடைபிடிக்கிறோமோ அந்த அளவிற்கே பாபாவின் அருள் நமக்கு கிடைக்கிறது! பாபாவின் வழிமுறைகள் நம்மால் யூகிக்கவே முடியாதவை!

வாங்க வேண்டும். பாபா அடிக்கடி, " சப் பைஸே கே பாய். அப்னா கொயி நஹி" என்று கூறுவார். அதாவது, " எல்லோரும் காசுக்காகவே, யாருக்காகவும் நாமில்லை" என்பதாகும். 1917 மே மாதம் 15 ஆம் தேதி லோகமான்ய திலகரும், கபர்தேவும் பாபாவின் தரிசனத்திற்கு வந்தபோது பாபாவுடன் பப்பாஜியும் இருந்தார்.

பாபா, 15.10.1918 அன்று மகாசமாதி அடைந்த போது பப்பாஜி துவாரகாமாயியில் பாபாவுடன் இருந்தார். பாபா கவலையோடும், பதட்டத்தோடும் இருந்த பக்தர்களை எல்லாம் வீட்டிற்கு அனுப்பிவிட்டார். ஒரு சில பக்தர்கள் மட்டும் பாபாவுடன் இருந்தார்கள். அத்தகைய ஒரு சிலரில் பப்பாஜியும் ஒருவர். அவருடைய தந்தையான லட்சுமண் மாமாதான் பாபா சமாதி ஆன மறுநாள் காலை ஆரத்தியை செய்தவர்.

பப்பாஜி, கீதாபாய் என்னும் பெண்ணை மணந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தார். அவருடைய தந்தையாரின் இறப்பிற்குப் பிறகு அவர் விட்டல் ஆலயத்தின் பூஜாரியானார். பப்பாஜி 1987 ஆம் ஆண்டு மே மாதம் சமாதியடைந்தார்.

அன்பும் நம்பிக்கையும்!



எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே தான் நம்பிக்கையும் இருக்கிறது! எதை நம்புகிறோமோ அதைத் தான் நேசிக்கிறோம்! யாரை நேசிக்கிறோ மோ அவரையே நம்புகிறோம்! இப்படி அன்பும் நம்பிக்கையும் இரு பக்கத்தின் ஒரு நாணயம்! ஒன்று இல்லாமல் ஒன்றில்லை!

தற்கால மனிதரிடம் அன்பு குறைந்ததால் தான் நம்பிக்கையும் குறைந்து விட்டது! அதற்குக் காரணம் சுயநலமே! சுயநலமான மனதிற்கு அன்பு என்றால் என்னவென்றே தெரியாது! அதற்கு இன்னொருவரை பயன்படுத்த மட்டுமே தெரியும்! நேசிக்கவே தெரியாது! சுயநலம் என்பது மிகப் பெரிய பாரம்! மிகப் பெரிய முள் படுக்கை அது!

இறைவன் பாபாவின் மேல் நமக்கு அன்பு ஏற்படாமல் நம்பிக்கையும் ஏற்படுவதில்லை! நம்பிக்கை ஆழமாக, ஆழமாக, அன்பும் ஆழமாகிறது! பாபாவிடம் எந்த அளவிற்கு அன்பு வைத்திருக்கிறோமோ அது தான் நமக்கு சக மனிதரின் மேலும் படர்கிறது! பரஸ்பரமாய் தொடர்கிறது!

பாபாவை ஏதோ ஒரு தனி நபர் என நாம் கற்பனை செய்வது நம் அறியாமையே! அன்பும் நம்பிக்கையும் இருக்கும் இடத்தில் மட்டுமே இருக்கிறார்! அன்பான நம்பிக்கையும் , நம்பிக்கையான அன்பும் அத்தனை பரம சுகம்! அப்படிப் பேரானந்தமாய் ஆன்மாவை குளிர்விப்பது பாபா ஒருவரே! ஏனெனில் அவரே அந்த நம்பிக்கை தருகிற அன்பும், அன்பு தருகிற நம்பிக்கையும்!

தொடர் –33

சாய் சரவணன்

"அதி தேவதை"

ஆயியின் பல சங்கல்பங்களை நாம் ஏற்கனவே கண்டிருப்போம். அதில் குரு பூர்ணிமா, அன்னதான சேவை போன்ற பல செயல்களில் வெற்றி அடைந்ததையும் கண்டோம். இப்போது நம் ஆயி சாயிநாதருக்கு," சாவடி ஊர்வலம்" எனும் மிகப்பெரிய வைபவத்தை நடத்த வேண்டி சங்கல்பம் கொண்டாள்.

பாபா சாவடிக்கு இரவு நேரங்களில் சில அடியவர்களுடன் சாதாரணமாகத்தான் சென்று கொண்டிருந்தார். ஆயி பாபா சாவடிக்குச் செல்வதை பல முறை கண்டிருக்கின்றாள். அப்படியாக ஓர் நாள் ஆயி பாபா சாவடிக்குச்செல்லும் சாதாரண நிகழ்வை சிறந்த வைபவமாக மாற்ற எண்ணம் கொண்டாள்.

பண்டரியில் பகவான் எப்படி பற்பல உபச்சாரங்களுடன், ஓர் ராஜாவைப்போல், சயன அறைக்கு அடியார்கள் புடைசூழ பூஜை, பனஸ்காரங்களுகன் செல்வாரோ, அதைப்போல பகவான் ஸ்ரீ சாயி விட்டலன் மசூதியில் இருந்து அடியவர்கள் சூழ, நாமகோஷம், ஜெய கோஷம் முழுங்க,உபச்சாரங்களோடு கிளம்பி சாவடிக்குச் சென்று பாபா இளைப்பாற வேண்டும் என ஆயி சங்கல்பித்துக் கொண்டாள்.

ஆகவே பாபாவின் இனிமையான சாவடி ஊர்வலத்திற்குத் தேவையான தரை விரிப்பு, பதாகை, கட்டியம் கூறுவோருக்கான சீருடை, வெண்சாமரம், சாவடியின்



தோற்றத்தை மாற்றம் செய்தல், சாவடியின் தரைகளைப் புதுப்பித்தல், சரவிளக்குகளை தொங்கவிடுதல், அலங்காரப்பொருட்கள், வாத்தியக்கருவிகள். குதிரை, தேர் பல்லக்கு, குதிரையை அலங்கரிக்க என எண்ணிலடங்காப் பொருட்களை சேகரிக்க ஆயத்தம் ஆனாள்.

விட்டலனது ஊர்வலம் பண்டரியில் எவ்வாறு விமர்சையாக நிகழுமோ, அதைப்போலவே சாயி கிருஷ்ணனது சாவடி ஊர்வலமும் மனதைக் கவரும்படி அழகுற இருக்க வேண்டி அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தாள்.

பாபாவிற்கு நடக்கும் இந்த சாவடி ஊர்வலம் மற்றும் ஆரத்தி வழிபாடு, பஜனைகள் எல்லாம் காலம் காலமாக நடைபெற வேண்டும் என அயராது

பாடுபட்டாள். பாபாவின் அன்பான அடியார்களிடமிருந்து சாவடி ஊர்வலத்திற்கு தேவையான அனைத்து பொருட்களையும் சேகரித்து விட்டாள். ஆயியின் புதுப்புது யோசனைகள் அனைத்தும் அடியவர்களுக்கு மிகவும் பிடித்து இருந்தது.

மேலும் பக்தர்கள் பாபாவின் மேல் கொண்ட அன்பால் ஆயி கேட்ககூடிய யாவற்றையும் மிகுந்த ஆனந்தத்துடன் வாங்கித் தருவதும் உண்டு. ஆனால் சீரடியில் முதன்முதலாக சாவடி ஊர்வலத்தை நடத்த ஆயி பல்வேறு சிரமங்களையும், மனக்காயங்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டி இருந்தது.

சாவடி ஊர்வலத்தைப் பற்றி பாபாவின் அடியவர்களிடம் பரிசீலனை செய்ய உகந்த நேரம் பார்த்து ஓர் நாள் மனதில் உள்ளவற்றை அடியவர்களிடம் கூறினாள். ஆயியோ பக்தர்களின் பார்வையில் ஒரு சாதாரணப் பெண். பலருடைய உதவியும் அனுமதியுமின்றி இவளால் இக்காரியத்தை எப்படிச் செய்ய இயலும்.

ஆயி கூறியதைக்கேட்ட சிலர் பிறரிடம் பிச்சை எடுத்து வாழும் சாயி பாபாவிற்கு, இதெல்லாம் அவசியமா? எனும் கேள்வி எழுந்த வண்ணம் காணப்பட்டது. பலர் மறைமுகமாக ஆயியை திட்டவும் தூற்றவும் செய்தனர். இதை எல்லாம் ஆயி பெரிதாக சட்டை செய்யாமல், எடுத்த சங்கல்பத்தை முடிக்க பல்வேறு யுக்திகளைக் கையாண்டாள்.

தனது விடாமுயற்சியால் மகல்சாபதி, தாத்யா, தாதாகேல்கர், நூல்கர்,பாடே, சியாமா,என பல முக்கிய சாயி அடியவர்களிடம், சாவடி ஊர்வலத்திற்கு சம்மதத்தைப் பெற்றாள். இராதாகிருஷ்ணாமாயி!

சாவடி ஊர்வலம் தொடங்கும் முன்பாக பாபா சயனிக்கும் சாவடியின் அமைப்பை அழகுற செய்யவும், சமமில்லாத தரைகளை சமப்படுத்தவும் பாபாவின் அடியவர்களை தூண்டி விட்டு, சாவடியை ஒழுங்கு படுத்தினாள். எல்லா அடியவர்களும் சாவடி ஊர்வலத்தை நடத்த ஆயத்தம் ஆனாலும், நம் சாயிநாதரின் சம்மதம் மிகவும் அவசியமாயிற்றே!

பாபா சரி என்று தலையாட்டுபவரா என்ன? அடியவர்கள் பாபாவிடம் சென்று சாவடி ஊர்வலத்திற்கு அனுமதி கேட்டதும், பாபா பெருத்த கோபம் கொண்டு வசவுகளை பொழியத் தொடங்கினார். சிறிது நேரத்திற்குப்பின் அமைதியான பாபா அடியவர்களிடம் சாவடி ஊர்வலத்திற்கு சம்மதம் தெரிவித்தார்.

சாயி சத்சரிதையில் பாபா, சீரடியில் பக்தர்கள் அவருக்கு எதை செய்ய விரும்பினாலும் முதலில் வசவுகளை யே தன் ஆசியாக வழங்கும் எண்ணற்ற கதைகளை நாம் கேட்டிருப்போம். அதைப்போலவே இந்நிகழ்வும். சாயிநாதர் ஆடம்பரத்தையும், விளம்பரங்களையும் அறவே வெறுத்தார். எனினும் அடியவர்களின் அன்பிற்கு அடிபணிந்தார்.

பாபா எதிர்காலத்தில் மானுட சமூகம் உயர்வடைய இந்த சடங்கு முறைகள் ஓர் உபகாரமாக இருக்கும் என்பதாலும் இராதாகிருஷ்ணமாயியின் பிரேம அன்பினாலும் ஒப்புக்கொள்ளவே செய்தார். அனைவரும் ஆனந்தம் அடைந்தனர்.

நம் ஆயி, அடியவர்களைக்கொண்டு வீதிகளை சுத்தம் செய்து சாவடியின் அமைப்பையே மாற்றி, பல அலங்காரப் பொருட்களைக் கொண்டு சாவடியை அனைவரின் மனம் கவரும்படி அலங்கரித்தாள். தன் சாயி



கிருஷ்ணனுக்காக.

அடியவர்கள் எந்த சேவை செய்து கொண்டிருப்பினும், பகவான் நாமாவை உச்சரிக்கும்படியும் பாபாவை நினைத்துக்கொண்டே பிரேமையோடு சேவை புரியும்படி அனைவரையும் ஊக்குவித்தாள்.

முடிவாக சாவடி ஊர்வலம் நடக்கும் நாளை அடியவர்கள் தீர்மானித்தனர். கார்த்திகை மாதம், வெள்ளிக்கிழமை, 1908 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் என்று முடிவு செய்யப்பட்டது. சாவடி ஊர்வலத்தின் அனைத்து விதமான ஏற்பாடுகளையும் இராதா கிருஷ்ணமாயியே செய்திருந்தாள்.

வாருங்கள் நாமும் சாயிநாதரின் சாவடி ஊர்வலத்திற்கு செல்வோம். அன்று காலையில் இருந்து ஆயி பாபாவின் இனிய ஊர்வலத்திற்காக, சகலவித ஏற்பாட்டையும் பாபாவின் அடியவர்களைக் கொண்டு செய்து கொண்டே இருந்தாள். மேலும் ஊர்வலத்தில் யார் யாருக்கு என்னென்ன பணிகள் உள்ளதோ, அதற்குத் தக்கபடி சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவரவர்களின் பணியை முழுமனதோடு செய்யும்படி வேண்டுகோள் வைத்தாள்.

பாபாவின் அடியவர்களும் ஆயியின் வாக்குக்கு மதிப்பளித்து செயல்பட ஆயத்தமானார்கள். அந்திசாயும் நேரம் அனைவரும் மசூதிக்கு வந்து தயார் நிலையில் தமது பணிகளை செய்யக் காத்திருந்தனர். மசூதியின் வாசலில் ஆயி அழகிய கோலங்களைப் போட்டிருந்தாள். சில அடியவர்கள் பாபா நடந்து செல்லும்போது தரைவிரிப்புகள் போட தயாராக இருந்தனர்.

பாபாவின் மேல் தூவ உதிரிப் பூக்களுடன் சில அடியவர்கள் தயாராக இருந்தனர். சாவடி முழுவதும் தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன. சாவடி வாசலில் மிகப்பிரமாண்டமான ரங்கோலி வரையப்பட்டிருந்தது.

ஆயி சாவடியின் உள்ளே பாபாவை அலங்கரிக்கவும், பூஜிக்கவும் ஒரு தாம்பாளத்தில் புதுப்பட்டாடை, அழகிய சால்வை, பூமாலை, வாசனை திரவியம், நேவேத்தியமாக ரவை அல்வா, பாயாசம், மற்றும் சில்லீம், ஒரு வெள்ளி டம்ளரில் பால், மற்றும் பீடாவும் பிரேமையோடு தயார் செய்து வைத்திருந்தாள்.

தாத்யாவும், மகல்சாபதியும் பாபாவை சாவடிக்கு அழைக்க மசூதிக்குள் நுழைந்தனர்.

– தொடரும்...

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

தொடர் –10

சுந்தர்சாய்

திருவருள் தேடி

ஓம் சாய்ராம்.

அனைவருக்கும் வணக்கத்துடன் சுந்தர்சாய், இனிய தமிழ்புத்தாண்டு வாழ்த்துக்கள், மற்றும் ஸ்ரீ இராமநவமி வாழ்த்துக்கள். எல்லோரும் எல்லா நலமும் பெற்று வாழ்வாங்கு வாழ சாயிநாதனின் கருணை பரிபூரணமாக கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.



எமது திருவருள் தேடி தொடரில் சத்ய சாய்பகவான், நம் வாழ்வில் ஒவ்வொரு நொடியிலும் எம்முடன் இருந்து, அருள் புரிவதை உணரும் பொழுது என்னே தவம் செய்தேன் என மிக வியப்பாக உணர்கிறேன். போன இதழில் வெளி நாட்டில் எமது வேலை நிமித்தமாக களப்பணி செய்ய உத்தேசம் செய்து, முயற்சி செய்ய, எதிலும் உம்முடன் யாமிருக்கிறோம் என்று உணர்த்தி எனக்கு அறிமுகம் செய்த நண்பரின் பெயர் திரு. மகேந்திரராவ் என்னும் சென்னை வாசி.

அவரை நாம் நமது இந்திய நண்பர்கள் குழாமில் சந்தித்து உரையாடிய சமயம் அவர்களிடம் எனது எண்ணங்களை பகிர்ந்த பொழுது அவரது இல்லத்திற்கு என்னை அழைத்தார். அவர் அங்கு மனைவி, குழந்தையுடன் வசித்து வருகிறார். அவர்களோடு ஒரு ஞாயிற்றுக்கிழமை சந்தித்து யாம் வந்த பாதையை விவரிக்கும் போது தான். அவரும் ஒரு தீவிர சாய் பக்தர் என்பது தெரிந்தது.

மிகவும் புல்லரித்த அனுபவம் அது! அத்துடன் அவர் தனது சாயி அனுபவங்களையும், சத்ய சாயி பகவானை புட்டபர்த்தியில் சந்தித்த அனுபவத்தையும் மிகவும் ஆர்வமாக பகிர்ந்து கொண்டார். நானும் சத்ய சாய்பாபாவைப்பற்றி மேலும்

தெரிந்து கொள்ள விரும்பியபோது, அவர் ஓர் அறைக்குள் சென்று, இரண்டு புத்தகங்களை கொண்டுவந்து கொடுத்ததோடு, தனனிடம் இந்த புத்தகங்கள் எப்படி வந்தது என்பதே தனக்குத் தெரியாது என்று அதிசயத்தில் ஆழ்த்தினார்.

இறையருள் குருவருளாய் மலரும்போது ஒவ்வொரு நிகழ்வும் அதிசயமாய் அமைவது என்பது நமக்கு இன்றளவில் பழக்கப்பட்டடது என்னவோ உண்மைதான். ஆனால் அன்றைய நாளில் யாம், பயணம் செய்த பாதையில் அனைத்துமே மலைப்பாய் இருந்தது. இந்தளவிற்கு பிரபஞ்சத்தின் தலைவனான நம் சாய் பகவான் நம்மை நேசிக்கின்றாரா?

இது எமக்கு மட்டுமே நிகழ்கிறதா? அப்படியானால் நாம் என்ன தவம் செய்தோம்? என பலவிதமான எண்ண அலைகள் எம் மனக்கடலில் வீசுகிறது.

நண்பர் மகேந்திரராவ் பிறப்பால் மஹாராஷ்டிரத்தை சேர்ந்தவர் சில தலைமுறைகளாக சென்னையில் வசிப்பவர். துபாயில் வேலைபார்த்து மணம் முடித்து குழந்தைகளுடன் இந்நாட்டிலேயே சொந்தமாக தொழில் செய்பவர். அவரும் இங்குள்ள அண்டை நாடுகளுடன் தொடர்பில் இருப்பதாக கூறியதுடன் அங்குள்ள சூழ்நிலைகளையும் எனக்கு விளக்கமாக கூறினார்.

அந்த விபரங்கள் எமக்கு மிகவும் உதவியாய் இருந்ததுடன் எமது திட்டமிடுதலில் ஒரு தெளிவு பிறந்தது.

நாம் எமது அடுத்த பயணமாக களப்பணி ஆய்வு செய்ய தேர்வு செய்த நாடு, ஜார்ஜியா மற்றும் ஆர்மேனியா இங்கு செல்ல எமக்கு விசா தேவைப்படும். அதற்கு ஒரு முறையாக அந்த நாட்டில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனத்திடம் இருந்துதான் விசா பெற வேண்டும்.



அந்த நாட்டில் நமக்கு தெரிந்தவர்கள் யாருமற்ற நிலையில் நானும் பல வழியில் முயன்று ஒரு தரகர் மூலம் அதற்குண்டான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தேன். அங்கு சென்றவுடன் நமக்கு வழிகாட்ட ஒரு உதவியாளர், மற்றும் மொழிபெயர்ப்பாளர் தேவை. இது போன்ற சவால்களை எதிர் கொள்ள நமக்கு ஒரே துணை பாபா மட்டுமே!



என் வாழ்க்கையில் ஒவ்வொரு படியும் சாயி பாபாவால் உயர்த்தப்பட்டது என்பதை உணர வைக்க ஒவ்வொரு சம்பவமும் ஒரு படிக்கல்லாய் எம்மை உயர்த்திக்கொண்டே சென்றது. இதை அனைத்தையும் இன்று பார்க்கும் போது, யாம் வேலை நிமித்தம் வெளிநாடு செல்லவில்லை. வாழ்க்கை பல்கலை கழகத்தில் ஆன்மீகம் கற்கவே என்பது தெளிவாய் புரிகின்றது.

என்னே ஓர் கருணை! இதை இறைப் பிரவாகம் என்றே கூறலாம். அந்தள விற்கு ஒவ்வோர் நொடியிலும் சாயி நம்மை வழிநடத்திக் கொண்டிருப்பதை உணர்ந்து விட்டோமானால் "நான்" கரைந்து சாயியோடு ஒன்றெனக் கலந்துவிடும் இன்பம்தான் எத்தகைய ஆனந்த விடுதலை.

நாம் ஒவ்வொருவரும் அதை அனுபவிக்க குருவருள் நம் அனைவருக்கும் துணை செய்ய வேண்டும் என்ற எல்லையில்லாத ஆசையே எம்மை இதை எழுதத் தூண்டுகின்றது. என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து இந்த உண்மையை உணர்கிறேன். வாருங்கள் சாய்ராம் நாம் அனைவரும் ஒன்றாக பயணிப்போம்.

ஒரு வழியாக ஒரு தரகர் மூலம் ஜார்ஜியாவிற்கு செல்ல விசாவிற்கு விண்ணப்பம் செய்து காத்திருந்தேன். அந்தநாட்டின் பாதுகாப்பு சூழ்நிலை குறித்து ஓர் எச்சரிக்கை தகவலை நண்பர் மகேந்தர் தெரிவித்திருந்தார். தனியாக சாலைகளில் பயணிப்பது, மற்றும் ஏ.டி.எம் மில் பணம் எடுப்பது, சில சமூக விரோதிகளை ஈர்க்கும் என்று கொஞ்சம் பயம் காட்டியிருந்தார்.

அதே நேரம் நமக்காக ஒரு பழைய தெரிந்த நபர் மூலம் நமக்கு ஒரு பாதுகாப்பான தங்கும் விடுதி, மற்றும் ஓர் உதவியாளரையும் ஏற்பாடு செய்து கொடுத்தது ஒரு பெரும் உதவியாக அமைந்தது. எனவே சற்று தைரியமாக விமான டிக்கெட் பெற்று "டிப்ளிஸி"

என்ற ஜார்ஜியாவின் தலைநகரை அடைந்து, வாடகைக்கு அறை எடுத்துக்கொண்டேன்.

ஆனால் உதவியாளர் நம்மை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எமக்கு உங்களுடன் பயணித்து உதவ முடியவில்லை என்றும், அவரது நண்பரான ஒரு பெண்ணை எனக்கு உதவ பணித்திருப்பதாகவும் தெரிவித்தார். எனக்கும் வேறு வழி தெரியாததினால் நானும் அந்தப் பெண்ணுடன் களப்பணிக்கு செல்ல ஆரம்பித்தேன்.

ஒரிரு நாட்களில் அந்த உதவியாளரின் அனுபவமோ, அவரது மொழி பெயர்ப்போ, நம் தேவையை நிறைவு செய்வதாக இல்லையே எமது மனம் சிறிது தளர்ச்சியடைந்தது. அவரிடம் நேரடியாக தெரிவிக்க சற்றே தயக்கமாகவும் இருந்தது.

ஏனெனில் அவர் ஒரு கல்லூரி மாணவி. நாம் கொடுக்கும் சம்பளம் சிறு தொகையா னாலும் அது அவர் படிப்பிற்கு எந்த அளவு உதவுமோ, அதையும் நாம் நிறுத்திவிட்டால் அவரது நிலை என்னாகும் என்ற தயக்கம் வேறு.

இந்த நிலையில் நானும், இண்டர் நெட் மூலம் எனக்கு அவசியமான சில தகவல்களை திரட்டி அங்குள்ள மருந்து வியா பாரத்தில் இருக்கும் சில முக்கியமான முகவர்களை, மொபைல் மூலம் தொடர்பு கொண்டு அவர்களின் நேர்முகம், மற்றும் விபரங்களுக்காக நேரம் கேட்டுப் பெற்றேன்.

அதை நன்றாக பயன் படுத்திக் கொள்ள எனக்கு நல்ல விபரமான மொழி பெயர்ப்பாளர் தேவைப்பட்டது. அத்துடன் எனக்கு ஒரு சவாலாக ஏற்கனவே எனக்கு முன் ஒருவர் அங்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் சில பணிகளை சரியாக செய்யாமல் எமது கம்பெனிக்கு அவப்பெயரை சம்பாதித்து கொடுத்திருப்பது தெரிய வந்தது.

அதை நேர் செய்யாமல் என்னால் அங்கு ஒன்றும் சாதிக்க இயலாது என்பதை தெரிந்து கொண்டதுடன் அதற்கான வழிமுறைகளைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினேன்.இடைப்பட்ட நாட்களில் நானே நேரிடையாக எமக்கு தெரிந்த அளவு ரஷ்யன் மொழியை நேரடியாக பேசி ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற துணிவு பிறந்தது.

நானும் மொழிபெயர்ப்பாளர் இன்றி களப்பணியை ஆரம்பித்தேன் இந்த நேரத்தில் எமக்கு கிடைத்த அறிமுகம் பகவான் சாயி நமக்கு உதவ தலையிட்டார் என்பது பின்னாளில் எமக்கு தெளிவானது என்பதை தொடர்ந்து வரும் இதழில் அறிந்து அனுபவிப்போம்.

எல்லாம் சாயி எல்லாமே சாயி குரு வாழ்க குருவருள் மலர்க!

தொடரும்...

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் "காலஞானி" ஸ்ரீ வீர பிரம்மேந்திர சுவாமிகளின் அருளாசி பெற்ற, அவரது சீடர், ஸ்ரீ கக்கையா சுவாமிகளையும், அவரது மனைவி. குரு மாதா ஸ்ரீ முத்தம்மா அவர்களின் வரலாற்று குறிப்புகளையும் அறிந்து கொண்டு அவர்களின் சீவ பீடத்தை தரிசனம் செய்வோம் வாருங்கள்.

ஸ்ரீ கக்கையா சுவாமிகள் குரு மாதா ஸ்ரீ முத்தம்மா

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் "காலஞானி" ஸ்ரீ வீர பிரம்மேந்திர சுவாமிகளின் அருளாசி பெற்ற, அவரது சீடர், ஸ்ரீ கக்கையா சுவாமிகளையும், அவரது மனைவி. குரு மாதா ஸ்ரீ முத்தம்மா அவர்களின் வரலாற்று குறிப்புகளையும் அறிந்து கொண்டு அவர்களின் சீவ பீடத்தை தரிசனம் செய்வோம் வாருங்கள்.



"காலஞானி" வீரபிரமேந்திர சுவாமிகளின் வரலாற்றை கூறும்போது, அவரது முரட்டுசீடன் ஸ்ரீ கக்கைய்யா சுவாமிகளைப் பற்றி கூறவில்லை என்றால் சுவாமிகளின் வரலாறு பூர்த்தியாகாது.

ஒரு முறை ஸ்ரீ வீரபிரமேந்திரர், தனது முதன்மை சீடரான சித்தையாவிற்கு, பிரம்ம தத்துவ மெய்ஞானத்தை வரிசைப் பிரகாரமாக உபதேசித்து, இதை விடாமல் தொடர்ந்து பயிற்சி செய்துவா என்று கூறி ஆசி வழங்கினார்.

சித்தையாவிற்கு பிரம்ம ஞான உபதேசம் வழங்கியதை, கக்கைய்யா

என்ற தாழ்த்தப்பட்ட ஒருவர் மறைந் திருந்து அனைத்தையும் கேட்டார். கக்கையய்யா, கடப்பா மாவட்டம், கந்திமல்லையய்ய பள்ளிக்கு அருகில் உள்ள, நரசன்னபள்ளே கிராமத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தவர். இவரது தொழில் தண்டோரா போடுவது ஆகும். இவரது மனைவி பெயர் முத்தம்மா தேவி.

மனித உடலில் உள்ள சக்கரங்களைப் பற்றியும், அதில் வாசம் செய்யும் தேவதைகளைப்பற்றியும் ஸ்ரீ வீரபிரம்மம், சித்தையாவிற்கு கூறியதைக் கேட்ட கக்கையய்யா தனது உடலில் உள்ள சக்கரத்தையும், தேவதைகளையும் பார்க்க ஆர்வம் கொண்டார்.

உடனடியாக தனது வீட்டிற்குச் சென்று தனது மனைவியைத் தேடினார். மனைவியோ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது கக்கையய்யா தனது மனைவியின் உடலில் உள்ள சக்கரத்தில் உள்ள தேவதையை பார்க்க வேண்டி வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து தன் மனைவி முத்தம்மாவின் வயிற்றில் வெட்ட மனைவி முத்தம்மா துடிதுடித்து இறந்து போனார்.

அதன் பின்பும் கக்கையய்யா உடலை துண்டு துண்டாக வெட்டி தேவதைகளைத் தேடினார். எதுவும் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து ஒருவாறாக தான் செய்த தவறை உணர்ந்து கதறி அழுதார். சுவாமிகள் சொன்னது பொய். அவரின் பேச்சைக் கேட்டு என் அன்பு மனைவியை கொன்று விட்டேனே என்று கதறியபடி வீரபிரம்மத்திடம் ஓடி வந்தார்.

அப்போதும் தன் சீடர் சித்தையாவிற்கு சக்ரத்தில் வாசம் செய்யும் தேவதைகளைப்பற்றி உபதேசம்



செய்து கொண்டிருந்தார் வீர பிரம்மம். உடனே அவர்களுக்கு இடையில் புகுந்த கக்கையய்யா, நீங்கள் கூறுவது அப்பட்டமான பொய், உங்களின் பேச்சைக் கேட்ட நான் என் மனைவி முத்தம்மாவை துண்டு துண்டாகி வெட்டிக் கொன்றுவிட்டேன். சக்கரத்தையோ, தேவதையையோ காணவில்லை என்று கதறி அழுதார்.

உடனே வீரபிரம்மேந்திரர் நடந்த அனைத்தையும் ஞான திருஷ்டியில் உணர்ந்து கொண்டு, கக்கையய்யாவை அழைத்துக்கொண்டு அவரின் வீட்டை நோக்கி விரைந்தார். வீரபிரம்மேந்திரர் சுவாமிகள் காலனிக்குள் வருவது ஊர் முழுக்க பரவியதும் ஊர் மக்கள் கக்கையய்யாவின் வீட்டின் முன் கூடிவிட்டனர்.



வீரபிரம்மேந்திரர், தன் முதன்மை சீடர் சித்தையாவையும் கக்கையாவையும் அழைத்துக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தார். பின்பு கக்கையாவை அமர வைத்து அவரது நெற்றியில் தனது விரலை வைத்து அவரது ஞானக்கண்ணை திறந்து தான் கூறிய ஆறு சக்கரங்களையும், அதன் அதி தேவதைகளையும் காண்பித்தார்.

அதன்பிறகு கமண்டலத்தில் இருக்கும் நீரை கக்கையாவின் மீது தெளித்தார். அவரும் தன் பழைய நிலையை அடைந்தார். பின்னர் ஒரு துணியை எடுத்து முத்தம்மாவின் உடல் மீது போர்த்தி அதன்மீது கமண்டல நீரை தெளித்துவிட்டு, இருவரையும் அழைத்துக்கொண்டு குடிசையை விட்டு வெளியே வந்து வாசலில் தவத்தில் உட்கார்ந்தார்.

சிறிது நேரத்திலேயே, உடல் பல துண்டுகளாக வெட்டப்பட்ட முத்தம்மா உயிரோடு குடிசையில் இருந்து வெளியே வந்து, ஸ்ரீ வீரபிரம்மேந்திரர் சுவாமிகளை விழுந்து பணிந்தாள். சுவாமிகளும் முத்தம்மாவிடம் நடந்த நிகழ்ச்சிகளை கூறினார்.

முத்தம்மாவும் சுவாமிகளை வணங்கி, தாழ்த்தப்பட்டவர்கள் என்று எங்களை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்தார்கள். ஆனால் நீங்கள் எங்களது இடத்திற்கே வந்து அற்புதத்தை காட்டிவிட்டீர்கள். உங்களுக்கு நாங்கள் ஆயுள் முழுக்க சேவை செய்ய கடமைபட்டுள்ளோம் என்று முத்தம்மாவும், கக்கையாவும் சுவாமிகளை வணங்கினார்கள்.

அன்றுமுதல் முரடனாக இருந்த கக்கையா ஞானம் பெற்று குருவிற்கு ஏற்ற சீடனாக மாறினார். குருவின் ஆசியால் இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்து காட்டி, கண்டிமலைபள்ளியில் சீவசமாதி அடைந்தார்கள்.

சீவசமாதி ஆலய முகவரி:

ஸ்ரீ கக்கையா சுவாமிகள் சீவ பீடம்,
ஸ்ரீ முத்தம்மா தேவி சீவபீடம்,
கந்திமல்லையப்பள்ளி,
பிரம்மஸ்கரிமடம் மண்டலம்,
கடப்பா மாவட்டம், ஆந்திரா 516503.

பேரூந்து வழித்தடம்:

சென்னையில் இருந்து வருபவர்கள் மாதவரம் பேரூந்து நிலையத்தில் இருந்து கடப்பா சென்று அங்கிருந்து கந்திமல்லை யப்பள்ளி என்ற கிராமத் திற்கு டவுன் பஸ் மூலம் சென்று ஸ்ரீ வீரபிரம் மேந்திரர் மடத்தை அடையலாம். அங்கிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள ஸ்ரீ கக்கையா மடத்தை அடையலாம்.

இரயில் மார்க்கம்:

சென்னை சென்ட்ரலில் இருந்து திருப்பதி சென்று அங்கிருந்து பேரூந்து மூலம் மடத்தை அடையலாம்.

"சித்தர்களின் சீவசமாதியைத் தொழுவோம்! கர்மவினை அகன்று கவலையின்றி வாழ்வோம்"!



எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி. நேத்ராலட்சுமி. கோவை.ரூ.3000.
திரு.பாலகிருஷ்ணன். அண்ணாநகர் ரூ.3000.
திரு.இராதாகிருஷ்ணன் உமா மகேஸ்வரி குடும்பத்தார். துறைமுகம். ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி. திருமலைச் செல்வி. கொளத்தூர். ரூ.1000.
திரு.என்.வெங்கடாசலம். டி.நகர்.ரூ.1000.
திரு. ஹேமானந்தகுமார். கொளத்தூர். ரூ.1000.
திருமதி. கமலா அரவிந்த். வேளச்சேரி. ரூ.1000.
திருமதி.ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK, ரூ.800.
திரு. விக்னேஷ். நெய்வேலி. ரூ.750.
திரு.கேஸ்வர். ஈரோடு.ரூ.700.
திருமதி. மீரா வெங்கடேசன். மாம்பலம். ரூ.501.
திருமதி. விஜயா. மாங்காடு. ரூ.501.

செல்வி.சாய் அர்ச்சனா, சென்னை 501.
திரு.இராஜகோபாலன். பெங்களூர். ரூ.500.
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திரு.துரை மணிகண்டன். சென்னை.ரூ.500.
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.
திருமதி.வாழ்க வளமுடன் சுமதி. கொளத்தூர். ரூ.500.
திரு. நீலவண்ண நாராயணன். திருப்பனந்தாள். ரூ.500
திரு. கார்த்திகேயன்.கதிர். ரூ.500.
திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.
திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.500.
திருமதி.திலகா சியாம்சுந்தர். முகலிவாக்கம்.ரூ.401.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திரு.கருணாமூர்த்தி.அயனாவரம். ரூ.400.
திருமதி. உமா விஜய்ஆனந்தன். அயனாவரம்.ரூ.400.
திருமதி.என்.பவித்ரா.கொளத்தூர். ரூ.300.
திரு.டி. எஸ்.கிருஷ்ணமூர்த்தி. கோவை. ரூ.300
திரு. ராம்குமார். பாண்டிச்சேரி.ரூ.300.
திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.300.
திரு.சாய்பிரபு. வில்லிவாக்கம். ரூ.300.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.
திருமதி.உமா முருகன்,சின்னாளபட்டி, ரூ.200.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திரு.சூர்யா. கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.
திருமதி.பிரியா குடும்பத்தார். அயனாவரம்.ரூ.100.
திருமதி. பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு.வேலு.டைலர்.பெரியார் நகர். ரூ.50
திரு. புவனா ஆதி குடும்பத்தார். அயனாவரம். அரிசி 1 மூ.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா - ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

* திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.
* திரு. குமார். கொளத்தூர். ரூ.501.
* திரு.திலகம். குரோம்பேட்டை.ரூ.300.
* திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
* திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.200.
* திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
* திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவித தமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068